விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 29 வெள்ளிக்கிழமை (12.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(ஓ-1232)

## புலம்பெயர் அமைப்புக்களுடனான பேச்சு தேசிய நல்லிணக்கத்தை பாதிக்கின்றது

### மங்களவின் கலந்துரையாடலுக்கு நிமல் எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை பேணிய புலம்பெயர் அமைப்புகளுடன் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கலந்துரையாடல்களை நடத்துவதால், தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

உலகத் தமிழர் பேரவையுடன் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு குத்தகம் ஏற்படுத்தும்.

23ஆம் பக்கம் பார்க்க....



# இழுபறி நிலையில் '20'

# இறுதி முடிவு இன்று!

### விசேட அமைச்சரவை கூடுகிறது

(கொழும்பு)

இழுபறி நிலையில் சர்ச்சையைக் கிளப்பியுள்ள 20ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான விசேட அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது என தெரிவித்துள்ள சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதியே எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத் தாக்குதல் மேலும் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினமும் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி யாழ்.நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து 129 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மனித உருவிலான மரச்சிலை மீட்பு



(மன்னார்)

மன்னார் பியர் பகுதிக் கடற்கரையில் மரத்தினால் உருவாக்கப்பட்ட மனித உருவிலான சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

தலைமன்னார் பியர்பகுதியில்

24ஆம் பக்கம் பார்க்க....

## பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இளம்பெண் ஒருவர் அவரது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஞானசிகாமணி பிரபதனி (வயது 30) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில பிரஸ்தாபப் பெண்ணின் தாயார் வைத்தியசாலைக்குச் சென்றிருந்ததுடன் சகோதரன் வேலைக்குச் சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் இருந்து வீட்டிற்கு திரும்பி வந்த தாயார் தனது மகள் கிணற்றிலில் சடலமாக கிட

24ஆம் பக்கம் பார்க்க....

## திரையிடப்பட்டது 'நோ பயர் சோன்'

(லண்டன்)

இலங்கையின் இறுதிப்போர் தொடர்பான சர்ச்சைக்குரிய ஆவணப்படம் நேற்று முன்தினம் பிரித்தானியாவின் ஜரிஷ் நாடாளுமன்றத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது

நோ பயர் சோன் என்ற இந்த ஆவணப்படம் நேற்று முன்தினம் மாலை காண்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப்படத்தில் இலங்கைப் படையினர் இறுதிப்போரின்போது மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் காணப்பிக்கப்படுகின்றன.

இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டபோது படத்தின் இயக்குநர் கெலம் மெக்ரே, இலங்கையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகளுக்கு நிவாரணக் கடன் வழங்க அனுமதி

### 5, 754 பேர் விண்ணப்பிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்த நிலையில் சமூகமயமாக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்த நிலையில், மனித நேய நடவடிக்கைகளின் இறுதியில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012

24ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய மலரை தவறின்றி அடையாளப்படுத்த அனுமதி



(கொழும்பு)

இலங்கை தேசிய மலரான நீலோத்பலம் மலரை தவறின்றி அடையாளப்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த அமைச்சரவை பத்தி ரத்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜகத் டயஸின் நியமனம் அமெரிக்கா அதிருப்தி

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் போன்ற ஒருவரை இராணுவ பணியாளர்களின் தலைமை அதிகாரியாக நியமித்தன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் கௌரவத்தை குறைத்து கொண்டுள்ளதாக அமெரிக்க செனட் உறுப்பினர் பெட்ரிக் லீஹி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையின் நீதி ஆணைக்குழுவில் கடந்த 9 ஆம் திகதி இலங்கை சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள அறிக்கையில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கம் ஜனநாயகம் தொடர்பில் மேற்கொண்டுள்ள பல முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட்டுள்ள அவர், மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜகத் டயஸ் போன்ற குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும்

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து யாழில் விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினூடாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்.புங்குடுதீவு பகுதியில் மாணவி சி.வித்தியா பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட மேலும் சில பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்கான ஆலோசனை அறிக்கை ஒன்றை புதிய குழுவினூடாக அடுத்த மாதம் நிறைவடைவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அதிகார சபையின்

24ஆம் பக்கம் பார்க்க....

## கடந்த கால பிழைகள் திருத்தப்படும் புலம்பெயர்ந்தவர்கள் திரும்பி வருவர்

### இரட்டைக் குடியுரிமை வழங்கலில் அமைச்சர் மங்கள உரை

(லண்டன்)

கடந்த காலத்தில் விடப்பட்ட பிழைகள் திரும்பவும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படாமல், இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என வெளியுறவு அமைசசர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பொது ஒழுங்கு, கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு ஆகியன இணைந்து நேற்று காலை 10 மணியளவில் இரட்டைக் குடியுரிமை சான்றிதழ்கள் கையளித்துள்ளது.

இந்த நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொது ஒழுங்கு மற்றும் கிறிஸ்துவ மத விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க, எம்.என்.சத்

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாளை (13.06.2015) சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா

நேரம் : முற்பகல் 11 மணியளவில்.
சோழியூரான் பிறைசூடிக்குரு

(729)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from the qualified persons for under mentioned posts.

FACULTY OF ENGINEERING

**Senior Professor /Professor** in Electrical & Electronic Engineering
**Senior Lecturer Grade I /Senior Lecturer Grade II / Lecturer (Probationary)** in Electrical & Electronic Engineering /Computer Engineering/ Engineering Mathematics / Mechanical Engineering /Civil Engineering

**Temporary Instructor** in Civil Engineering / Computer Engineering /Electrical & Electronic Engineering / Mechanical Engineering / Engineering Mathematics

**Note:**
1. The Candidates for Temporary Instructor are expected to conduct the engineering laboratories covering all specializations of Civil and Environmental Engineering ,Electrical and Computer Engineering, Mechanical and Process Engineering.
2. Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Instructor.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs. 67,100-11 x 1425 - 82,775/- p.m |
| Professor | Rs. 56,505-13 x 1310 - 73,535/- p.m |
| Senior Lecturer Grade I | Rs. 45,545- 7 x 1050 - 52,895/- p.m |
| Senior Lecturer Grade II | Rs. 39,755-11 x 790 - 48,445/- p.m |
| Lecturer (Probationary) | Rs. 27,775-10 x 645 - 34,225/- p.m |
| Temporary Instructor | Rs. 21,370/- fixed per month |

Note:
In addition to the above salary, the following allowances will also be paid for academic staff :

I) Academic allowance -Senior Professor - 135% of the basic Salary
Professor - 130% of the basic Salary
Senior Lecturer Gr.I/Gr.II- 120% of the basic Salary
Lecturer (Probationary) - 85% of the basic Salary

II) Further 35% of the basic Salary will be paid as Research allowance based on the research activity of the academic staff
III) Special allowance -20% of the basic Salary
IV) Additional Monthly Allowance- 20% of the basic Salary and Interim Allowance - Rs. 10,000/- p.m( other than Temporary Instructor)
V) Cost of living allowance Rs.7,800/- p.m

**Statutory benefits:**
I) Sabbatical leave entitlement for the holder of the post of Senior Lecturer Grade II and above
II) Membership in Universities provident Fund and Pension Scheme in the University system.
III) Gratuity Payments
IV) Employees' Trust Fund benefits
V) Free Medical Services

**Closing Date:**

| | |
|---|---|
| **Temporary Instructor** | **-26.06.2015** |
| **post of Senior Professor / Professor** | **-10.09.2015** |
| **Other posts** | **-10.07.2015** |

Applications and other documents for the post of Senior Professor / Professor shall be sent to the **Vice - Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna , Thirunelvely , Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna. Srilanka. either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self- addressed stamped envelope 23x10 c.m in size. Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs. 100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna** Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants form the University System /Government Departments /Corporations and Statutory Board Should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation . Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**11.06.2015**

(C-1239)

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து இரகசியமான முறையில் அறிவியுங்கள்

## பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

(கொழும்பு)

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இரகசியமான முறையில் பொலிஸாருக்கு அறிவிக்கு மாறு பொலிஸார் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் நீண்ட காலத்தின் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணைக்குப்படுத்தப்படும் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவண் குணசேகர தெரிவித்தார்.

குறிப்பாக சம்பவங்களுடன் தொடர்புடைய சாட்சியங்களை அடையாளம் காண்பதற்கும் அவர்களினூடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் சிக்கல் நிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களின் அக்கறையின்மையே சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுவதற்கு காரணம் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஆகவே சிறுவர்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கோ அறிவிக்குமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவண் குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

### 100 வெளிநாட்டு மது போத்தல்கள் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமான சேவை வாகன தரிப்பிடம் பகுதியில் கைவிடப்பட்ட அறையொன்றில் இருந்து வெளிநாட்டு மதுபான போத்தல்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

விமான நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (செ-11)


### 06.06.2015 இல் இடம்பெற்ற பருத்தித்துறை

ப.நோ.கூ.சங்க 2015-ம் ஆண்டுக்கான இயக்குநர் சபை தெரிவு

திரு.தம்பிராசா சந்திரதாஸ் - தலைவர்
திரு.நா.சண்முகசுந்தரம் - உப தலைவர்

**இயக்குநர்கள்**

திரு.ஆறுமுகம் அருணாசலம்
திரு.வினாசித்தம்பி குலராஜசிங்கம்
திரு.யோசப் கொன் விக்டர்
திரு.தங்கலிங்கம் வசந்தரூபன்
திரு.செல்வநாயகம் தர்ஷன்

(707)

திரு.த.சந்திரதாஸ் மிக அதிகபடியான வாக்குகளை பெற்று மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

**வீடு வாடகைக்கு**

இல. 282, அரசடி வீதி, கந்தர்மடம், நல்லூர், யாழ்ப்பாணத்தில் இரண்டு மாடி வீடு ஒன்று தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு
072 292 8781
(727)



உங்களின் மங்கலகரமான சகல வைபவங்களுக்கும்

**அம்ச மஹால்**

ஆடியபாதம் வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கு,
021 221 3488 / 0777 030 418
(731)

**விற்பனைக்கு**

எம்மிடம் கோயில் தேவைக்கேற்ப பித்தளை சில்வர் பொருட்கள், வட்டு விசேஷங்களுக்கான பரிசுப்பொருட்கள், பாத்திரங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறிசக்தி படமாடம்
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(பொலிஸ் நிலையத்திற்கு அருகில்)
021 491 1830
(C-1231)


## மரண அறிவித்தல்

**திருமதி நல்லைநாதன் பரமேஸ்வரி (கண்ணாடி அக்கா)**



கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லைநாதன் பரமேஸ்வரி 11.06.2015 நேற்று வியாழக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

74, அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு

தகவல்
குடும்பத்தினர்
021 222 6207

(730)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு

புற்றுநோய், எயிட்ஸ் நோய் தடுப்பு சங்கத்தினால் புற்றுநோயாளர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் 150 நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் இ.தெய்வேந்திரன் தலைமையில் கடந்த பல வருடங்களாக வழங்கப்பட்டுவரும் இவ்வுதவித் திட்டத்தின்கீழ் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி லண்டன் ஆஞ்சநேய சுவாமிகளினால் புற்றுநோயாளர்களுக்கு ஆசீர்வாதமும் 3ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா மற்றும் சத்துணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இலக்கம் 9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி சங்கப்பணிமனையில் வைத்து இவ்வுதவி வழங்கப்படவுள்ளது. (இ-3)

## இரத்ததான நிகழ்வு

மக்கள்வங்கியின் 54 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள்வங்கி, யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் (CBEU) ஏற்பாட்டில் இடம்பெறும் இரத்ததான நிகழ்வானது நாளை மறுதினம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் இடம்பெறவுள்ளது. (இ-3)


**சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஜகி வாசுதேவினால் முதல்முறையாக அனைவருக்கும் யோகா**
**இலவச யோகாசனப் பயிற்சி வகுப்பும் தியானமும் பயில்வதுடன் பயிற்றுவிப்பதற்கும் வாய்ப்பு**



சத்குரு ஜகி வாசுதேவின் கீழ் பயின்ற ஆசிரியர் வைத்திய கலாநிதி கௌரிபாலன் நடத்துகின்றார். சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஜகி வாசுதேவினால் முதல்முறையாக வடிவமைக்கப்பட்ட அனைவருக்கும் யோகா. இதை தாங்கள் 30/90 நிமிடங்களில் பயில்வதுடன் உங்கள் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் பயிற்றுவிக்க முடியும்.

5 நிமிடப் பயிற்சிக்கும் வாய்ப்பு உண்டு. பிற யோகாசன அமைப்புக்களின் ஆசிரியர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

1. இடம்: ஞானாலயம்
   117, VM வீதி, பருத்தித்துறை.
   நேரம்: 6-8 பிற்பகல்
   காலம்: 12.06.2015 (இன்று வியாழக்கிழமை)
2. சிவகுருநாத பீடம் குமாரசுவாமி வீதி,
   கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
   காலம்: 13.06.2015
   நேரம்: பிற்பகல் 4-6 ஆரம்ப பயிற்சிகள்
   காலம்: 14.06.2015
   நேரம்: முற்பகல் 9-10 முன்பு உப யோகா பயின்றவர்களுக்கு மீள் பயிற்சி மணிவரை முற்பகல் 10-12 ஆரம்ப பயிற்சிகள்.

சுவிஸ் உள்ளவர்கள் வைத்திய கலாநிதி கௌரிபாலன் யோகசனம் அவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்பதை கலந்துரையாட சந்தர்ப்பம் உண்டு.

குறிப்பு: 1. இலேசான மதிய உணவை 12 மணிக்கு முன் உண்ணவும்.
2. தளர்வான உடை பயிற்சிக்கு நன்று.
பெண்களுக்கு மூடிய கழுத்துச் சட்டை அவசியம்.
3. அமர்ந்து இருக்க துவாய் அல்லது துணி தேவை.
சிறு தலையணையும் உதவியாக இருக்கும்.

**தொடர்புகளுக்கு: வைத்திய கலாநிதி கௌரிபாலன்**
**071 924 7919**



**இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 40<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/836 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 34 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA, B.COM<br>தொ.இ: G/1433 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம் மூலம்<br>கி.பா: 21<br>தகைமை/தொழில்:BA/ அரச தொழில்<br>தொ.இ: B/837 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 31<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/1434 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 72 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/839 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 79 செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/1437 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 27 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/840 | பிறப்பு: 1964 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 8 3/4 சூரிசெவ் 3 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1439 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



**யாழ்.வண் வடகிழக்கு கலட்டி**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**
**இன்று மூன்றாம் நாள்**



வேழ முகத்தவனே வேதனை தீர்க்கும் விநாயகனே
கலட்டி வீரகத்திக் கணபதியே கஜமுகனே!
ஞால முதல்வனே வேதநாயகனே ஆனைமுகத்தோனே
ஞானப்பழம் பெற்ற சக்திகணபதியே கரிமுகனே!
ஓலமிட்டு அழுதுன்னைப் பாடியே வணங்கினோம்
ஓங்காரமுதற் பொருளே ஆங்காரம் தீர்ப்பவனே!
பாலமுருகனின் பாசமிகு அண்ணனே! பால கணபதியே!!
ஆனை வாகனத்திலே வந்து அருட்காட்சி தருவாயே!

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)

(C-1238)



**கிருஷ்ணா அடகு சேவை**

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு 31.05.2014 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2015) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2015 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

இல.370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.021 222 5046

(சி-1237)


# இராசி பலன்

12.06.2015
(வைகாசி 29, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.43 மணிவரை
ரேவதி முற்பகல் 9.54 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
ஏகாதசி விரதம்

**வளவன்**

**மீனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், வாக்கு மேன்மையுண்டு

**மேடம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள்.

**கும்பம்:** பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், குடும்ப பொறுப்புகள் கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்ல தகவலைத் தரும் தொலைபெசி அழைப்புகள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மகரம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**சிம்மம்:** தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**தனுசு:** கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சுபதகவல்கள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** தம்பதியினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வெளியூர் பயணத்தால் ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகனப்பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 217**

# பொறாமையிலிருந்து விடுதலை!

…ஆன்மீகம் அல்லது சந்நியாசம் என்பது துறப்பதைப் பற்றியே அல்ல. அது ஆழமான விழிப்புணர்வைப் பெறுவது பற்றியது.

விழிப்புணர்வு பெறும்பொழுது முட்டாள்தனமான ஆசைகள் தானாகவே சுருங்கி அடிப்படைத் தேவைகள் மட்டுமே எஞ்சி நிற்கும்.

விழிப்புணர்வானது, அதை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆற்றலைக் கொடுத்து, பிறகு உங்களை உள்ளே திருப்பிவிடும்.

வெளியுலகில் செய்யப்பட வேண்டியவையெல்லாம், சந்தேகத் திற்கிடமின்றி, செய்யப்பட வேண்டியதுதான்.

நீங்கள் வாழ்வதற்காக சம்பாதிக்க வேண்டும்; அது தொடர்பான விடயங்களைப் பார்க்க வேண்டும்; உங்கள் உடலை உயிருடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

நான் சொல்வதெல்லாம் என்னவென்றால், இவை எல்லாவற்றிலும் விழிப்புணர்வைக்கொண்டு வாருங்கள்; அதனால், வெளியுலகில் தேவையற்ற நடவடிக்கைகள் தானாகவே மறைந்துவிடும்; மேலும் உங்கள் பிறப்பு மற்றும் வாழ்வின் நோக்கத்தைப் பற்றிய ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதலோடு வாழ முடியும்.

பிறகு எல்லாவிதமான மாயைகளும் அனைத்துக் கடன் வாங்கப்பட்ட ஆசைகளும், புகுத்தப்பட்ட அத்தனை பயங்களும், எலலாவிதமான பொறாமையும் ஒப்பிடுதலும், தீவிரமான உணர்ச்சிகளும், இச்சையும் ஒரு முழுமையான மாற்றத்திற்குட்பட்டு, உங்களுக்கு ஒரு ஆனந்தமயமான சக்தியாகிவிடும்.

ஒரு சின்னக் கதை....

ஒரு குருவும் சிஷ்யனும் நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு ஆற்றை அடைந்தனர். ஆச்சரியமடைந்த சிஷ்யன் கேட்டான், குருவே நான் இப்பொழுது ஆற்றைக் கடக்கப் போகிறோமா? குரு அமைதியாகச் சொன்னார், ஆம், கடக்கப்போகிறோம். பாதம் நனைந்துவிடப் போகிறது. பத்திரம்! குரு என்ன சொல்கிறார் என்பதைச் சீடனால் புரிந்து கொள்ள முடியவில்லை.



ஆன்மீகம் என்பது கால்கள் நனையாமல் வாழ்க்கைக் கடலைக் கடப்பது என்பதையே குரு புரிய வைக்க முயற்சி செய்கிறார்.

ஆன்மீகம் என்பது உலக விடயங்களிலிருந்து தப்பி ஓடி விடுவதல்ல. இதில் மிகவும் தெளிவாக இருங்கள்.

ஆன்மீகம் என்பது உண்மையில் வாழ்க்கைப் பொறியியல், கல்லூரிகளில் பலவகையான பொறியியல் படிப்புக்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அவையெல்லாம் உங்கள் மூளையை விற்பதற்குப் பதிலாகக் கிடைக்கும் வெற்றுச் சான்றிதழ்கள்.

நம் ஒவ்வொருவருக்கும் போதிக்கப்பட வேண்டியது வாழ்க்கைப் பொறியியலே. ஆன்மீகம், உங்களுக்கு இந்தப் பொருள் சார்ந்த உலகத்தில ஒரு பரமஹம்சர் அல்லது தன்னை முற்றிலும் உணர்ந்த ஒரு ஞானியைப் போல கழுத்தளவு நீரில் நின்றாலும் அதனால் தொடப்படாமல், வாழக் கற்றுக்கொடுக்கிறது.

அது யாருடைய அல்லது எதனுடைய வரம்பையும் மீறாமல் ஒரு தீவிரமான மன நிறைவான வாழ்வை வாழக் கற்றுக்கொடுக்கிறது.

அது உங்களுடைய புத்தியிலிருந்து துண்டித்துக்கொண்டு, பிரபஞ்ச இருப்புத்தன்மையின் அதிசயங்களை, ஒப்பிடுதல், பொறாமை, இச்சை போன்ற எந்த விதமான மாயத்தோற்றங்களும் இன்றி, விழிகள் விரிய கள்ளங்கபடமற்ற தன்மையுடன் பார்க்கக் கற்றுக் கொடுக்கிறது.

அது பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து இயங்கி, தற்செயலின் ஆற்றலை அனுபவிக்கக் கற்றுக் கொடுக்கிறது.

அப்பொழுது உங்களின் உள் மகிழ்ச்சியின் விளைவாக விடயங்கள் தானாகவே நிகழ்வதைக் காண்கிறீர்கள்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# என்ன ஒரு மரியாதை?

மசாய் பழங்குடி மக்கள் கென்யா, தான்சானியா நாடுகளில் வசிக்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது கைகுலுக்கிக் கொள்ள மாட்டார்கள். மாறாக ஒருவர் முகத்தில் ஒருவர் துப்பிக் கொள்வார்கள். நல்ல வேளை முகத்திலேயே துப்பிட்டான் இப்பத்தான் நிம்மதி என்று மனதில் நினைத்த படி முகத்தில் வழியும் எச்சிலை சந்தோசத்தோடு துடைத்துக் கொள்வார்கள்.





அப்போதுதான் மரியாதை, நட்பு எல்லாம். சந்திப்பவர்கள் நண்பர்கள் என்றால் துப்புவது வேகமாக இருக்கும். எதிரில் வருபவர் துப்பாமல் சென்று விட்டால் அவர் எதிரி ஆகிவிட்டார் என்று அர்த்தம். சிலரிடம் முகத்தில் துப்புவதற்கு பதிலாகக் கைகுலுக்கிக் கொள்ளும் நாகரிகப் பழக்கமும் உண்டு. இருந்தாலும் கைகுலுக்கிக் கொள்வதற்கு முன் கைகளில் துப்பிக்கொள்வார்கள். இவர்களுக்குக் குழந்தை பிறந்தால் அத்தனை பேரும் கூடிநின்று குழந்தை மேல் துப்போ துப்பென்று துப்பிவிடுவார்கள். இதுபோக, குழந்தையைப் பார்த்து நாசமாப்போ என்று திட்டித் தீர்ப்பார்கள். நன்றாயிரு என்று சொன்னால் குழந்தை நாசமாய் போகுமாம். நாசமாப்போ என்று சொன்னால் நன்றாக இருக்குமாம். வாழ்வாங்கு வாழுமாம். நாச மாப்போச்சு போங்க!

# சமைப்போம் சுவைப்போம்

## அகத்திக் கீரைக்கூட்டு



**தே.பொருட்கள்:**

அகத்திக்கீரை - 1 கட்டு
பாசிப்பருப்பு - 50 கிராம்
தேங்காய் - 2 டேபிள் ஸ்பூன்
மிளகாய் - 3
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்
உப்பு - தே.அளவு
தே.எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

முதலில் பாசிப்பருப்பை நீரில் 1 மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் சேர்த்து தாளிக்க வேண்டும். பின் அதில் கீரையை போட்டு நன்கு கிளறி, பின் ஊற வைத்துள்ள பாசிப்பருப்பை கழுவிப் போட்டு நன்கு பிரட்டி விட வேண்டும். பிறகு அதில் தேவையான அளவு தண்ணீர் தெளித்து, மூடி வைத்து வேக வைக்க வேண்டும். கீரையானது நன்கு வெந்த பின், அதில் உப்பு மற்றும் துருவிய தேங்காயை சேர்த்து நன்கு கிளறி இறக்கினால், அகத்திக்கீரை கூட்டு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையும் காவல்துறையும் இறுக்கமாக இருக்குமாயின் யாருமே வாலாட்டமுடியாது!



"இன்னும்ஒருமாத காலத்துள் யாழில் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் வரும்" என்றால் எவ்வளவு மன மகிழ்வாக இருக்கும். இவ்வாறான மனோநிலை நேற்றைய வலம்புரி பத்திரிகையின் தலையங்கத்தைப் பார்த்தபோதுஏற்பட்டது. "குற்றச்செயல்களைக் கட்டுபடுத்தஒருமாதகால அவகாசம்"மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பொலிசாரிற்குப் பணிப்பு என்றவாறு இருந்தது.

ஆட்சிமாற்றத்தின் பின் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட மாறுதல்களுள் குறிப் பிடத்தக்கவை ஆளுநர் மாற்றம் மற்றும மிகச்சிறந்த தமிழர்களான நா.வேதநாயகன் அரச அதிபராகவும் மா. இளஞ்செழியன் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டவையாகும்.

தற்போது மா. இளஞ்செழியன் மிகவும் முக்கியமான தருணத்தில் மிக உறுதியாக முதலடியை எடுத்து வைத்துள்ளார். நீதித்துறையும் காவல்துறையும் மிக இறுக்கமாக இருக்குமாயின் யாருமே வாலாட்ட முடியாது. அதாவது, தத்தமது சாதாரண கடமைகளை நேர்மையாகச் செய்தாலே போதும்.

பெரும்பாலான குற்றச் செயல்களிற்கு, வேலைவாய்ப்புகள் இன்மையும்,க.பொ.த சாதாரண தரத்திற்குமேல் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்குச் சரியான வழிகாட்டலும் பயனுள்ள பொழுதுபோக்குமற்ற நிலையால் இளைஞர்கள் விரக்தியுற்றும் அதிகரித்த போதைப்பாவனையும் சினிமாக்களின் தாக்கமுமே காரணம் எனலாம்.

இவற்றிற்குத் தீனிபோடுவது போன்று, தாங்கள் பட்டது போன்று தமது இளைய சமுதாயத்தினர் துன்பப்படக்கூடாது என்ற நோக்கத்தோடு,இன்னும் சிலர் தமது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காக வெளிநாட்டிலுள்ள உறவினர்கள்,மோட்டார் சைக்கிள்கள் கைத்தொலைபேசிகள் போன்ற அவ்வயதினருக்குக் கட்டாயம் தேவையானது என்றில்லாத,ஆடம்பரமானவற்றை வாங்கிக் கொடுக்கின்றனர். அவற்றிற்கானபராமரிப்புச் செலவிற்கு அவர்கள் துன்பப்படுவர் என்பதை அறிந்திருப்பதில்லை.

அதுமட்டுமல்லாது,சில பெற்றோர் தமது பிள்ளைகளைத் திருத்தவே ஆசிரியர்கள் கண்டிக்கின்றனர் என்பதை மறந்து, தமது பிள்ளைகள் மீதுகொண்ட அதீத பாசத்தால் ஆசிரியர்களுடன் முரண்படுவதால், சமுதாயப் பொறுப்புள்ள அந்த ஆசிரியர்களும் "எமக்கேன் சோலி" என ஏனைய மாணவர்களைத் திருத்துவதையும் விட்டுவிடுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்திலே தான் இச்செய்தி நிம்மதிப் பெருமூச்சினைவிட வைக்கின்றது.

அண்மையில், இந்த இந்த இடங்களில் போதைப் பொருட்கள் விற்பனை யாகின்றன (குறிப்பாக பிரபல பாடசாலைகள்), கலாசார சீரழிவுகள் நடைபெறுகின்றன என்ற மாவட்டச் செயலக அறிக்கையினை இணையத்தளத்தில் பார்க்கக் கிடைத்தது.

எனவே,இவ்விடங்களில் சட்டம் தனது கடமையைச் செய்யும் நேரம் வந்துவிட்டது.

அந்தவகையில்,பொது மக்களாகிய நாமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எமது கட்டாய கடமையாகும்.

அதேவேளை, இச் செயல்களின் பின்னால் இருப்பவர்கள பெரும்பாலும் பண வசதி படைத்தவர்களாகவும் பல வேறு மட்டங்களில் செல் வாக்கு மிக்கவர்களாகவும் விளங்குவதால் சட்டம் மாபெரும் சவாலைச் சமாளித்தேயாக வேண்டும்.

மிகமுக்கியமானவிடயம் யாதெனில், அப்பாவிகள் யாரும் இவ்விடயத்தில் பாதிக்கப்பட்டு விடக்கூடாது.

அதேவேளை தேசியம், தேசிய உணர்வுள்ளவர்கள் என்று எம்மைக் கூறிக் கொள்ளும் நாம் வெறும் பேச்சளவில் தானா? எம் கண்முன்னே எமது சமுதாயம் அழிவுப் பாதையில் செல்கிறதே மீட்க முயற்சிக் கிறோமா?

லீகுவான் யூ எவ்வாறு சிங்கப்பூரைக் கட்டியெழுப்பினாரோ அவ்வாறு எமது பிரதேசத்தைக்கட்டி யெழுப்பும் சந்தர்ப்பமாக இதனைக் கருதுவோம்.

தொடர்ந்து 66 நாட்களுக்கு ஒரு செயலினைக் கடைப்பிடித்து வந்தோமேயானால் அதுவே எமது பதிய பழக்கமாக மாறிவிடும் என்கிறது நரம்பியல் ஆராய்ச்சி முடிவுகள்.

எனவே,நாம் எல்லோருமே 100 நாள் திட்டம் போன்று நல்ல விடயங்களை மிக இறுக்கமாக தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், அதுவே எமது சமுதாயத்தின் ஒட்டு மொத்தப் பழக்கமாகிவிடும்.

இலங்கையின் 25 மாவட்டங்களில் மிகச் சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணத்தை உருவாக்குவோம். பிரேரணைகளை நிறைவேற்றுவதோடு மட்டும் நின்றுவிடாது,அரசு ஒன்றுமே செய்ய விடுகுதில்லை என்ற சாட்டுகளை விடுத்து,மக்களோடு மக்களாக மக்களுக்காக உழைப்போம்.

நிறைவாக, குப்பை கூழங்களற்ற வீதிகள் அதிகம் புகைக்காத வாகனங்கள் தரிப்பிடங்களில் மட்டுமே நிற்கும் தனியார் அரச போக்குவரத்து வாகனங்கள் வீதியொழுங்குகளைக் கடைப்பிடிக்கும் சாரதிகள்,வாள்வெட்டு, கொலை, கொள்ளை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்ற செய்திகளற்ற பத்திரிகை மற்றும் இணையச் செய்திகள் மன ஈடுபாட்டுடன் கற்பிக்க ஆசிரியர்களுக்கு ஊக்கம்,மக்கள் சேவையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டஅரச பணியாளர்கள், சமுதாயத்தில் உண்மையான அக்கறை கொண்ட புத்திஜீவிகள் மற்றும் இளைஞர்கள் கொண்டது எமது பிரதேசம் என்பது கனவு மட்டும்தானா? இல்லை! நிச்சயமாக நனவாக்க முடியும். அது எமது ஒவ்வொருவர் கைகளிலுமேதான் தங்கியுள்ளது.

**Dr.S.கண்ணதாசன்**
யாழ்.பல்கலைக்கழகம

**எல்.எல்.ஆர்.சி.பரிந்துரைக்கமையவே பேச்சு**

# புலம்பெயர் தமிழர்களுடன் இரகசியப் பேச்சு இல்லை!

## அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமையவே அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களுடன் வெளிப்படையாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இதில் எவ்வித இரகசியமும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.**

புலம்பெயர் தமிழர்களுடன் லண்டனில் நடைபெற்ற சந்திப்பினைத் தொடர்ந்து இலங்கையில் இவ்வருடம் புலம்பெயர்ந்தோருக்கான விழா (Diaspora Festival) ஒன்றை நடத்துவதன் மூலம் வருடந்தோறும் அதனை தொடர்ந்து முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தீர்மானித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிவிவகார அமைச்சில் வாராந்தம் நடக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. அரசாங்கம் லண்டனில் தமிழ் டயஸ்போராவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியதா? என செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சின் பேச்சாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து இன, மத பேதமின்றி நல்லிணக்கத்திற்காக ஒத்துழைப்பு வழங்க முன்வரும் அனைவரின் உதவிகளையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராகவிருப்பதாகவும் அவர் விளக்கமளித்தார்.

பேச்சுவார்த்தையில் டயஸ்போரா சார்பில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த நபர் பிரிவினைவாதத்திற்கு ஆதரவாக செயற்பட்டிருந்தாரென்ற அடிப்படையில் அவர் நம்பிக்கைக்குரியவரென வெளிவிவகார அமைச்சு கருதுகின்றதாவென்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், கடந்தகால அரசியலை திருப்பி பார்த்தால் எவர் மீதும் நம்பிக்கை கொள்ள இயலாது. எமக்கு தனி நபர் அல்லது அமைப்பு மீது நம்பிக்கை கொள்வதனை விட நல்லிணக்கச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதே இலக்காகுமென்றும் அவர் தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் விஜயம் செய்து பல தர



ப்பட்டவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் பல சிபாரிசுகளை முன்வைத்துள்ளது.

அந்த சிபாரிசுகளுக்கமைய நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அனைத்து இனங்களுக்கிடையிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டிய அதேநேரம் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது அவசியமாகுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் அனைத்து இனங்களைச் சேர்ந்த டயஸ்போராவுடனும் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# யாழில் 4000 மாணவர்கள் யோகாசனப் பயிற்சியில்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 21ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 4ஆயிரம்மாணவர்கள்யோகா பயிற்சியில் கலந்து கொள்ளவுள்ளதுகயாழ்.இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் பணிப்புரைக்கமைய இம்மாதம் 21ஆம் திகதி அன்று சர்வதேச யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

முதன்முறையாக அனுஷ்டிக்கப்படவுள்ள இந்தத் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக 21ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்மத்திய கல்லூரிமைதானத்தில் மாணவர்கள் யோகா பயிற்சியில் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றையதினம் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களுக்கான யோகா பயிற்சி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கல்வி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றையதினம் ஆர்வமுள்ளவர்கள் இந்த யோகா பயிற்சியில் கலந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரித்திணைக் களத்தின் யாழ்.பிராந்திய அலுவல கத்தினால் சிறந்த வரி செலுத்துநர் களுக்கான சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு இன்று மாலை 6.30மணியளவில் நடைபெறவு ள்ளது.

இந்நிகழ்வில் உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி கல்யாணி தக நாயக்கா பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் வரி நிர்வாகத் திற்குட்பட்ட பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 24 சிறந்த வரி செலுத்துநர்கள் ''சிறப்புரிமைச் சான்றிதழ்'' வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் கல ந்து கொள்ளுமாறு உள்நாட்டுஇறை வரித்திணைக்களத்தின் யாழ் பிரா ந்திய பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி சு.சர்வேஸ்வரன் அறி வித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்.கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (இ-7)




# செயற்கைக் கை வழங்கும் செயற்றிட்டம் இன்று யாழில்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் முழங்கைக்கு கீழ் கைகளை இழந்தவர்களுக்கு யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினால் செயற்பாட்டு திறனுடைய செயற்கைக் கை வழங்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைபொருத்தும் நடவடிக்கைகள் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலிய றோட்டறிக்கழக உறுப்பினர்களான வைத்திய நிபுணர்களால் கைகள் பொருத்தப்படவுள்ளன.

முழங்கைக்கு கீழ் ஆகக் குறைந்தது 10 சென்ரிமீற்றர் நீளத்துக்கு கை இருக்க வேண்டும். இவ்வாறு பொருத்தப்படும் கைகள் வினைத் திறனுடன் செயலாற்றக் கூடியன. தமது இயல்பான செயற்பாடுகளை குறித்த கையைப் பயன்படுத்தி செயற்படுத்த முடியும்.

பதிவுகளின்படி முன்னுரிமையின் அடிப்படையிலேயே கைகள் பொறுத்தப்படவுள்ள . கைகளைப் பொருத்திக் கொள்ள விரும்புபவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

குறித்தளவு கைகளே இந்த இரு தினங்களும் பொருத்த தயார் நிலையில் உள்ளதால் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கிஷோக்குமார் 077 389 5395 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## ஆண்டு விழா

கருவிமாற்றுத் திறனாளிகளின் சமூகவளநிலையத்தின் ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை 12ம் திகதி நல்லூர் கல்வியங்காட்டு அருளம்பலம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு சமூக வள நிலையத் தலைவர் க.தர்மசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசெயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும் சிறப்பு விருந்தினராக இலங்கைமன்றக் கல்லூரியைச் சேர்ந்த க. ஜங்கரனும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

வரவேற்புரையை சமூக வள நிலைய் செயலாளர் து.ஜசிந்தன் நிகழ்த்துவார். ஆசியுரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தைச் சேர்ந்த அருட்திரு ஆர்.ஸரலின், யாழ்ப்பாணம் சின்மயாமிஷனைச் சேர்ந்த ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளார்கள்.

இந் நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

சமூகவள நிலைய அங்கத்தவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-5)

# முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி-2015 நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை உள்ளக விளையாட்டு மைதானத்தில் தலைவர் செ.கு.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் க.துரைசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஜே/264 கிராம அலுவலர் எஸ்.ஏழிலரசன், உரும்பிராய் வலி.கிழக்கு பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பாளர் பா.உதயகுமார் மற்றும் கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி சிறீதேவி தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## ஊடகவியல் கருத்தரங்கு

2015 இல் க.பொ.த. உயர்தரம் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான ஊடகவியல் கருத்தரங்கு ஒன்று நாளை 13 ஆம் திகதியும் நாளை மறுதினம் 14 ஆம் திகதியும் (சனி - ஞாயிறு) பிசப் சவுந்தரம் கம்பசில் தினமும் காலை 8.30 - மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது என பிசப் சவுந்தரம் கம்பஸ் இயக்குநர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மற்றும் துறை சார் வல்லுநர்களால் நடத்தப்படும் மேற்படி கருத்தரங்கிற்கு கட்டணமாக 500 ரூபா அறிவிடப்படும். தினமும் தேநீரும் மதிய உணவும் வழங்கப்படும். இரு முழுநாள் பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு மட்டும சான்றிதழ் வழங்கப்படும். (இ)

## உருவச்சிலை நேற்று திறப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள புனித அந்தோனியார் உருவச்சிலை நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளைஉரியவகையில்அனுமதி பெறப்படாமல் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நெல்லியடி பொலிஸ்நிலையத்தில்நேற்று முந்தினம் மாலை முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். (இ-3-60)

## கலந்துரையாடல்

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் ஜனவரி 8 இற்குப் பின்னரான அரசியல் கலந்துரையாடல் நாளை மறுதினம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் டி.சி.எம். (தனியார் கல்வி நிறுவனம்) யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் தலைவர் எ.ஜி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் மஹோற்சவ ஏற்பாடுகள் பூர்த்தி

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

எதிர்வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

திருவிழாவில் பங்கேற்க வருகை தரவுள்ள பக்தர்களுக்கு தேவையான உணவு, சுகாதாரம், குடிநீர், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பிற்கென நூறிற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மஹோற்சவ காலத்தில் அதிகாலை 4.30 மணிமுதல் யாழ். பேருந்து நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் நோக்கி தனியார் மற்றும் இ.போ.ச.பேருந்து சேவைகளும் அதிகாலை 6 மணிமுதல் குறிகாட்டுவனிலிருந்து நயினாதீவிற்கு படகு சேவைகளும் இடம் பெறும்.

பேருந்து கட்டணமாக ரூபா.72 அறவிடப்படும் என்று இலங்கை போக்குவரத்துச்சபை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப்பொருட்கள் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் உரிய அனுமதிகளை பெற்றபின்னரே கோவில் வளாகத்தில் தமது வியாபாரங்களை மேற்கொள்ள முடியும் என்பதுடன் பச்சைகுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு இவ்வருடமும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையினர்



தெரிவித்துள்ளனர்.

மேலும் பக்தர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளில் கடற்படையினரின் பங்களிப்பு இருக்குமென கடற்படை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

பக்தர்கள் எவ்வித சிரமங்களுமின்றி திருவிழாகாலங்களில் ஆலயத்திற்கு சென்று வருவதற்கான சகல ஏற்பாடுகளும் உரிய முறையில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# கழிவு மீள் சுழற்சி நிலையத்தினை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை

காக்கைதீவு பகுதியில் அமைக்கப்படவுள்ள பிளாஸ்டிக், பொலித்தீன் (கழிவு) மீள் சுழற்சி நிலையத்தினை குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன்தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையின் கழிவகற்றல் செயற்பாட்டின் கீழ் நாளாந்தம் 90 தொன் கழிவுகளை அகற்ற வேண்டி உள்ளது.

இக்கழிவுகளில் பெருமளவான பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள் சாதாரணமாக உக்கக்கூடிய கழிவுகளுடன் அகற்றப்படுவதால் மற்றைய கழிவுகளும் உக்காமல் காணப்படுவதுடன் நிலத்தின் இயற்கை தன்மையும் பாதிப்படைகிறது.

எனவே முதன்முறையாக காக்கைதீவுப் பகுதியில் 12.5மில்லியன் ரூபா நிதியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் மீள் சுழற்சிநிலையத்தைஅமைக்கவுள்ளோம். அதன் செயற்பாட்டை குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்குவதன்மூலம்வினைத்திறனானசேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் மாநகரசபைக்குட்பட்ட ஏனைய அயல்பிரதேசங்களில் சேகரிக்கப்படும் உக்காத இரசாயனக் கலவையுள்ள பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி கழிவுகளினை பயன் விளைவுடையதாக்குதலுடன் சிறந்த அழகிய ஆரோக்கியமான நகரை உருவாக்கமுடியும்.

இத்திட்டத்தினால் மாநகர சபைக்குட்பட்ட கழிவுகளினையும் ஏனைய அயல் பிரதேசங்களில் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை உரிய முறையில் உரிய காலப்பகுதியில் தனியாரினால் சேகரிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதனால் சூழல் மாசடைவதில் இருந்தும் தொற்றுநோய் அபாயங்களில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என அவா மேலும் தெரிவித்தார். (இ-9)







வடமராட்சி அல்வாய் இளங்கோ சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கு திறப்புவிழா இளங்கோ மைதானத்தில் நேற்று முந்தினம் மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட [illegible] மற்றும் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் உட்பட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து [illegible] படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியினை அகற்றுவது புண்ணிய காரியம்-பிரசன்ன

(கொழும்பு)


ரணில் விக்ரகிமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவது நாட்டுக்கும் நாட்டின் எதிர்கால சந்ததிக்கும் செய்யும் புண்ணிய காரியம் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெறவுள்ள மகிந்த ராஜபகஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வலியுறுத்தும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல மக்கள் பிரதிநிதிகளிடமும் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கு இருக்கின்றது என்பது இன்று நடைபெறும் கூட்டத்தில் உறுதியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் இறுதி எச்சரிக்கை விளக்கு இன்று நடைபெறும் கூட்டம் எனவும் நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் மாபெரும் போராட்டம் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளரான மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் இந்த அரசாங்கத்தில் அவரது சகோதரரான அர்ஜுன ரணதுங்க அமைச்சராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## பிரதமர் ரணிலுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணையை வாபஸ் பெறவே போவதில்லை

### மகிந்த ஆதரவு எம்.பிக்கள் விடாப்பிடி


**(கொழும்பு)**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெறப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தம்மிடம் அவ்வாறு கோரவில்லை என்றும் எதிர்க் கட்சியிலுள்ள மகிந்த ராஜபக்ஷ ஆதரவு எம்.பிக்கள் நேற்று முன்தினம் கூட்டாக பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.**

மேற்படி நம்பிக்கையில்லா பிரேரணையை வாபஸ்பெறப் போவதாக பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ள தகவல் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதாகக் குறப்பிட்ட எதிர்க் கட்சி எம்.பிக்கள் இது முற்றிலும் தவறான கூற்று என்றும் வாபஸ் வாங்கும் தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது. வழமையான பணிகளுக்கு பின்னர் எதிர்க் கட்சி எம்.பி. தினேஷ் குணவர்தன சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பினார்.

இதன்போது முன்னாள் அமைச்சர்கள் பந்துல குணவர்தன, விமல் வீரவன்ச, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோரும் அதற்கு ஆதரவாக குரல் எழுப்பினர்.



இதன்போது பிரதியமைச்சர் அஜித் பெரேராவின் கூற்று தவறானதும், பாராளுமன்றத்தை அவமதிப்பதுமாகும். அத்துடன் பாராளுமன்றத்தை பரிகசிப்புக்குள்ளாக்கும் விடயம் என்றும் அவர்கள் சபையில் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 100 பேருக்கு மேல் கையொப்பமிட்டு சமர்ப்பித்துள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான முழு பொறுப்பும் பாராளுமன்றத்திற்கே உள்ளது. அது தொடர்பில் பிரதியமைச்சர் அஜித் பெரேரா தீர்மானம் எடுக்க முடியாது.

பாராளுமன்றமே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும்.

ஏற்றுக்கொண்டால் இதனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் ஏற்று விவாதத்திற்கான தினமொன்றை அறிவிக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட தினேஷ் குணவர்தன எம்.பி. நேற்றைய தினமும் தமது குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து 20ஆவது திருத்தம் தொடர்பில் கலந்துரையாடினோம்.

எனினும் அப்போது பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி எம்மிடம் கோரவில்லை. பிரதியமைச்சர் அஜித் பெரேராவின் கூற்று உண்மைக்குப் புறம்பானது என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தினேஷ் குணவர்தன எம்.பி. சபையில் முன்வைத்த பிரச்சினை சிறப்புரிமைப் பிரச்சினையொன்றல்ல என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பான சர்ச்சை சபையில் சில நிமிடங்கள் நீடித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செயலாளர் பதவி குறித்து அனுர, சுசில் விளக்கமளிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு அமைய தாம அவற்றின் செயலாளர் பதவிகளை வகித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கட்சியினரின் விருப்பம் இல்லாமல் போகும் நாளில் பதவிகளை கைவிட தாம்தயார் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் செயலாளர் பதவிகளில மாற்றம் ஏற்படும் என கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.


அது வெறும் செய்தி மாத்திரமே என்பது தற்போது உறுதியாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அனுரபிரிய தர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# என்னைக் கைது செய்தால் தெலுங்கானா அரசு கவிழும்

## சந்திரபாபு நாயுடு எச்சரிக்கை

(டில்லி)

தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கும் தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவுக்கும் இடையில் மோதல் முற்றி வருகிறது. இந்நிலையில், "சந்திர சேகர ராவ் என்னைக் கைது செய்தால், அதுவே அவரது அரசின் கடைசி தினமாக இருக்கும்" என்று சந்திரபாபு நாயுடு எச்சரித்துள்ளார்.



தெலுங்கானா மேலவைத் தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சிக்கு வாக்களிக்க தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி எம்எல்ஏ எல்விஸ் ஸ்டீபன்சன்னுக்கு, தெலுங்கு தேசம கட்சி எம்எல்ஏ ரேவந்த் ரெட்டி இலஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பாக நாயுடுவுக்கும் எல்விஸ் ஸ்டீபன் சன்னுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை குறித்த தொலைபேசி உரையாடலும் வெளியாகியுள்ளது. இந்நிலையில், மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சந்திரபாபு நாயுடு மேலும் கூறியதாவது,

என்னுடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டதோ அல்லது எங்களைப் போன்ற குரல் உடையவர்களை வைத்து சித்திரிக்கப்பட்டதோ. எதுவாக இருந்தால் எனக்கென்ன? அதற்கு நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்?

நாம் இப்போது இரண்டு மாநிலங்கள். இரண்டுமே தெலுங்கர்களின் நலனுக்காகத் தான் இயங்குகின்றன. நம் இரண்டு மாநிலங்களின் வளர்ச்சிக்காக நாம் இருவரும் இணைந்து செயறபட வேண்டும் என்று பலமுறை கூறியுள்ளேன்.

ஆனால் இத்தனைக்கு பிறகும், என்னுடைய நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் அவர் செயற்பட்டு வருகிறார்.

தெலுங்கானாவில் இருந்து நான் எம்எல்ஏக்களை எடுத்து வருவதாக அவர் குற்றஞ் சாட்டுகிறார். ஆனால் உண்மையில்அவர்தான்என்னுடைய கட்சி எம்எல்ஏக்களை தன் பக்கம் இழுத்து அவர்களை அமைச்சராகவும் ஆக்குகிறார். அதன் மூலம் என் கட்சியை உடைக்கப் பார்க்கிறார். இதனை தட்டிக் கேட்காமல் ஆளுநரும் அமைதியாக இருக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு தாமதம்

### வவுனியா மாவட்ட நோயாளிகள் விசனம்

(வவுனியா)

சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சிறுநீரக நோயாளிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி சிறுநீரக நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்துக்கு பின்னர் வவுனியா மாவட்டமே அதிக சிறுநீரக நோயாளிகளை உள்ளடக்கிய மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. இந்நிலையில் புதிய அரசின் வரவு செலவு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போன்று அனைவருக்கும் கிடைக்க கூடியவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் அதிகளவான சிறுநீரக நோயாளிகள் விண்ணப்பித்துள்ள போதிலும் சிறு தொகையானவர்களுக்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையினால் தமக்கு குறித்த பணம் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

## பாடசாலை செல்கின்ற சிறார்களின் கற்றல் செயற்பாட்டிற்காக நிதிசேகரிப்பு

(கண்டாவளை)

நாடளாவிய சர்வதேச போதைப்பொருள் மற்றும் மது ஒழிப்பு வாரம் கடந்த மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த காலப்பகுதியில் சமுர்த்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் கிராமங்கள்தோறும் சென்று போதைப்பொருள் மற்றும் மதுபாவனையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இனங்காணப்பட்டு அங்கு பாடசாலை செல்லும் சிறார்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.

இச்சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக அந்தந்தக் கிராம சமுர்த்தி சங்கங்கள் ஊடாக சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இணைந்து நிதிசேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சேகரிக்கப்பட்ட நிதியானது அந்தந்தக் கிராமங்களின் சமுர்த்தி உத்தியோகத்தர்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் சிறார்களுக்கு கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்க வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-263)

### சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில்

# ஈடுபடுகின்ற மீனவர்களை வெளியேற்றத் தவறின் ஆயிரக்கணக்கான மக்கள் கடலிலிறங்க நேரிடும்

### வைத்திய கலாநிதி சிவமோகன் எச்சரிக்கை

சட்டவிரோதமான முறையில் சங்கு அள்ளுதல், ஒளி பாச்சி அளவு வேறுபாடின்றி அட்டைகள், உயிர் சங்குகளை அள்ளுதல் போன்றவை எமது கடல் வளத்தை மோசமாக பாதிப்படையச் செய்கிறது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவு கடற்கரைக்கு திடீரென சென்ற அவர்,

அங்கு சட்டவிரோதமான முறையில் சங்கு அள்ளுதல், இரவில் அளவு வேறுபாடின்றி அட்டை அள்ளுதல் போன்ற கடல் வளங்களை சூறையாடும் கூட்டங்களை சந்தித்தார்.

ஐந்நூறுக்கும் மேற்பட்ட இயந்திரங்கள் பூட்டிய வள்ளங்களில் பல ஆயிரக்கணக்கான சட்ட விரோத தொழில் செய்பவர்கள் முல்லை.சாலைக் கடற்கரையை ஆக்கிரமித்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இரவில் கடல் அட்டைகள் பிடிக்க முடியாது மேலும் 18 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்றுதான் மேற்படி கடல் அட்டை பிடிப்பதை படகில் செய்ய வேண்டும் என்பது நியதி.

ஆனால் இவர்கள் இரவில் ஒளி பாச்சி அளவு வேறுபாடின்றி அட்டைகள், உயிர் சங்குகளை சட்டவிரேதாமாக அள்ளுவதால் எமது கடல் வளம் மோசமாக பாதிக்கப்படுகிறது.

அதுவும் பலநூறு வள்ளங்களில் தினசரி மேற்படி சூறையாடல் எவருக்கும் பயமின்றி நடைபெற்று வருகிறது.



இதனால் சாலை முதல் முல்லைத்தீவு வரை பல்லாயிரக்கணக்கான மீன்பிடி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அன்றாடம் சாப்பாட்டுக்கே மீன் பிடிபடாதபோது எப்படி வாழ்க்கையை கொண்டு செல்வது என்று பரிதவிக்கிறார்கள்.

இரவில் ஒளி பாச்சி பல்லாயிரக்கணக்கான சிலிண்டர் பூட்டப்பட்ட அட்டை அள்ளுபவர்கள் கடலில் இறங்குவதால் மீன்கள் கரைக்கு வருவதில்லை. மேலும் உயிர் சங்குகள் அள்ளப்படுவதால் அதன்மேல் உள்ள சளி போன்ற பதார்த்தத்தை உண்ண வரும் மீன்களும் வருவதில்லை.

தொடரும் அரசியல் பின்னணிகளுடன் செயற்படும் இவர்கள் சட்டவிரோதமாக கோடி கோடிகளாக உழைத்துக் கொண்டிருக்க எமது மீனவர்களோ அன்றாட பிழைப்புக்கே நாதியற்று வாழ்கிறார்கள்.

இந்த சட்ட விரோதிகளை உடனடியாக முல்லை.மண்ணில் இருந்து அகற்ற உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறும் பட்சத்தில் எமது கடல் வளத்தை நாம் பாதுகாக்க ஆயிரக்கணக்கில் மக்கள் கடலில் இறங்க நேரிடும்.

கடல் வளம் மத்திய அரசுக்கு சொந்தமானது என்று கூறிக்கொண்டு எமது வாழ்வாதாரத்தை சுரண்டும் கூட்டத்தை நாம் அனுமதிக்க முடியாது என கூறினார். (2)

## மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு சிறைத்தண்டனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பகுதியில் மதுபோதையில் மோட்டார சைக்கிளைச் செலுத்தி சென்றவருக்கு ஒரு மாதகால கட்டாயச் சிறைத் தண்டனையும், 7ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

அவருடைய சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு மாதகாலத்துக்கு இடைநிறுத்தி வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

பூநகரிப் பகுதியில் சென்ற இவரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்த பூநகரி பொலிஸார், கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோதே மேற்படி தண்டனை வழங்கப்பட்டது. (2)




## நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல்

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கிணங்க பக்கதர்களின் நலன் கருதி பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2)

## போதனாசிரியர் பதவி நிலை வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள 16 தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக்கல்வி நிலையங்களில் நிலவுகின்ற போதனாசிரியர் பதவி நிலை வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண அரச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள மாகாண தகவல் தொடர்பாடல் கல்வி நிலையத்திலும் மற்றும் வலயக்கல்வித் திணைக்களங்களின் கீழுள்ள கணனி வள நிலையங்களிலும் நிலவுகின்ற 16 போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான வடக்கு மாகாண அரச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் (வவுனியா)-2 யாழ்ப்பாணம் கல்வி வலயம்-2, மன்னார் கல்வி வலயம்-1, மடு கல்வி வலயம்-3, துணுக்காய் கல்வி வலயம் -3, வவுனியா தெற்கு கல்வி வலயம்-1, வவுனியா வடக்கு கல்வி வலயம்-2, கிளிநொச்சி கல்வி வலயம்-2 ஆகிய இடங்களிலேயே வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

மேற்படி போதனாசிரியர் வெற்றிடங்களுக்கான தகைமைகளையும் ஏனைய நிபந்தனைகளையும் அறிந்து கொள்ள விரும்புவோர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கடத்தலில் ஈடுபடும் விசமிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(வவுனியா)

**வவுனியாவில் காடுகளை அழித்து பல ஆண்டு கால பெறுமதியான மரங்களை, சில விசமிகள் கடத்திச் செல்லும் நிலை தொடர்ந்த வண்ணம் உள்ள நிலையிலும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் தயக்கம் காட்டுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

காடழிப்பு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம்,

வவுனியாவில் இன்று பரவலாக காடழிப்பு இடம்பெற்று வருகின்றது. பல செல்வாக்கான நபர்களின் ஊடாக காடுகள் அழிக்கப்பட்டு, இரவு வேளைகளில் டிப்பர்களில் கற்கள் மற்றும் வேறு பொருட்களுடன் சேர்த்து பெறுமதியான மரங்களும் கடத்தப்படுவதாக கிராம மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே பொலிஸார் மற்றும் ஜனாதிபதி வரை தெரியப்படுத்தியுள்ளோம். எனினும் இன்று சுற்றுச்சூழல் பற்றி பேசும் ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே ஆதங்கமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் மாளிகை கிராம சேவகர் பிரிவில் பிராமணத்தி கூழாங்குளம் மேற்கு பக்க காடு, அலைகல்லு போட்டகுளம் காடு, ஆறுமுகத்தான் புதுக்குளம் கிராம சேவகர் பிரிவில் மரையடித்தகுளம் காடு, மகிழங்குளம் கிராம சேவகர் பிரிவில் மகிழங்குளம் காடு, மருதங்குளம் கிராம சேவகர் பிரிவில் நாகப்புலம், மருதோடை காடு, சேமமடு கிராம சேவகர் பிரிவில் சேமமடு காடு, கள்ளிக்குளம் பிரிவிலும் பாவட்டாங்குளம் காடு போன்ற காட்டுப்பகுதிகளில் இவ்வாறான பெறுமதி மிக்க பாலை மற்றும் முதிரை மரங்களுடன் சிறிய முதிரை மரங்களும் கடத்தி செல்லப்படுகின்றன.

இன்று மீள்குடியேறிய மக்கள், தமது வீடுகளை அமைப்பதற்கு சிறிய தடிகளை வெட்டினால் கைது செய்யும் பொலிஸார், பாரிய மரக் கடத்தலை தடுப்பதற்கு நாதியற்று நிற்பதாக எண்ணத் தோன்றுகின்றது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்திலும் பல கிராம சேவகர் பிரிவுகளில் மரங்கள் வெட்டிக்கடத்தப்பட்டு வருவதாக பொதுமக்கள் எம்மிடம் முறையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஓமந்தை சோதனைச்சாவடியூடாக, மரங்களுடன் சென்ற வாகனங்களின் விபரத்தை தருமாறு கோரியிருந்தோம். ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறைவு காலத்தின் பின்னரே வடக்கு பிரதேசத்தில் காடழிப்பு மிக மோசமாக இடம்பெற்று வருகின்றது. எனவே, ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுத்து மரக்கட்டத்தலில் ஈடுபடும் விசமிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வெறும் சுற்றுச்சூழல் தொடர்பில் குறிப்பிடப்பட்ட நாளில் மாத்திரம் நினைவு கூர்வதால் எவ்வித பலனும் கிடைத்து விடப்போவதில்லை என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




## பற்றைக்காடுகளிலிருந்து வீதிகளுக்கு பாம்பு, விஷ ஜந்துக்கள் படையெடுப்பு

### அச்சத்துடன் பயணிப்பதாக மக்கள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)



கிளிநொச்சி புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள வீதிகளின் இரு மருங்குகளிலும் உள்ள பற்றை காடுகளிலிருந்து பாம்பு உள்ளிட்ட விஷஜந்துக்கள் வீதிகளுக்கு படையெடுப்பதனால் அதனூடாக பயணிக்கின்றவர்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் மக்களின் செறிவு குறைவாக காணப்படுவதால் பல காணிகள் பற்றைக் காடுகளாக மாறியுள்ளன.


அவற்றுகுள் விஷ பாம்புகள் உள்ளிட்ட விஷ ஜந்துக்கள் மட்டுமன்றி அதற்குள் இருக்கின்ற நீர் நிலைகளில் முதலைகளும் இருக்கின்றன.

அவைகள் வீதிகளுக்கு படையெடுப்பதனால் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அந்த பற்றைக் காடுகளை துப்புரவு செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

## மருக்காரம்பளை பிரதான வீதியை திருத்தம் செய்வது எப்போது?

### பொதுமக்கள் கேள்வி

(குருமன்காடு)



வவுனியா குளுமாட்டுச்சந்தியில் இருந்து ஆரம்பமாகும் மருக்காரம் பளை பிரதான வீதியானது கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும இதுவரை எந்தவொரு திருத் தப் பணிகளும் மேற்கொள்ளப்படாமையால் குன்றும் குழிகளும் ஏற்பட்டு பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக வீதியால் பயணிக்கும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கி ன்றனர்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை பிரிவிற்குட்பட்டு காணப்படும் இவ்வீதியானது கணேசபுரம், சமயபுரம், சுந்தரபுரம், மணிப்புரம், மருக்காரம்பளை, பத்தினியார் மகிழங்குளம், காத்தான் கோட்டம், பட்டகாடு, குகன் நகர் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதியாகும். பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் தினமும் இவ்வீதியை பயன்படுத்தி வருகினறனர். வவுனியா கணேசபுரம் விநாயகர வித்தியாலயம், சுந்தரபுரம் பாடசாலை, புதுக்குளம் மகாவித்தியாலயம் உள்ளிட்ட பல்வேறு பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தினமும் இவ்வீதியை பயன்படுத்தி வருகி ன்றனர். சாதரணமாக ஒரு வீதியால் வாகனத்தில் செல்ல முடியாது என்ற நிலை மாறி இவ்வீதியால் நடந்து கூட செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் இரவு நேரங்களிலும் மழைகாலங்களிலும் குறித்த வீதியால் பயணிக்க முடியாத சூழ்நிலை காணப்படு கின்றது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையை சேர்ந்த சில முக்கிய பிரமுகர்கள் மற்றும் சில அதிகாரிகள் தினமும் தமது வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு இவ்வீதியாலேயே பிரயாணம் செய்கின்ற போதிலும் குறித்த வீதி தொடர்பில் கண்டுகொள்ளாது இருப்பது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாரிகாலத்திற்கு முன்னர் குறித்த வீதியை புனரமைத்துத்தருமாறு பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)

## அரச திணைக்களங்களின் குறை நிவர்த்தி நடமாடும் சேவை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் வடக்கு மாகாண சபையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து குறைநிவர்த்தி நடமாடும் சேவையொன்றை எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை மு/பாலிநகர் மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேறியுள்ள துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 15 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமாக மொத்தம் 35 கிராமசேவையாளர் பிரிவுகளில் வசிக்கின்ற 9ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்களினது மிகவும் அத்தியாவசியமான அரச திணைக்களங்களின் சேவைகள் இந்நடமாடும் சேவை மூலம் வழங்கப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவையின் போது தேசிய ஆள் அடையாள அட்டை,கடவுச்சீட்டு, பிறப்பு,இறப்பு, திருமண சான்றிதழ்கள்,சமுர்த்தி தொடர்பான சேவைகள், கமநல சேவைகள்,பொலிஸ் திணைக்களத்தின் சேவைகள், தொழில் திணைக்களத்தின் சேவைகள்,இலங்கைமின்சார சபையின் சேவைகள் மற்றும் போக்குவரத்து,குடிநீர் வழங்கல், அஞ்சல் திணைக்களம்,கால்நடை வைத்தியம், பொதுச்சுகாதாரம், கல்வி எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அன்றையதினம் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு வருகைதரும் மக்களின் நலன்கருதி இலவச போக்குவரத்து சேவைகளை துணுக்காய் பிரதேச செயலக பிரிவிலுள்ள அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், தென்னிய ன்குளம், துணுக்காய் ஊடாக பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கும் புத்துவெட்டுவான், ஐயங்கன்குளம், மல்லாவி ஊடாக பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கும் கல்விளானில் இருந்து துணுக்காய் மல்லாவி ஊடாக பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கு காலை 6மணிக்கு பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பணங்காமம், நட்டாங்கண்டல், பாண்டியன் குளம்,சிவபுரம் ஊடாகவும் விநாயகபுரம்,பொன்னகர்,பூவரசன் குளம், கரும்புள்ளியான், பாண்டியன்குளம் ஊடாகவும் வன்னி விளான்குளம், அம்பாள்நகர், கொல்லர் விளான் குளம் ஊடாகவும் மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திற்கு காலை 6மணிக்கு இலவச பேருந்து சேவைகள் நடைபெறவுள்ளது.

எனவே பொதுமக்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களின் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வு

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களுக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வு, அண்மையில் கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்செயலமர்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இராஜரட்ணம் செந்தூரன் வளவாளராகக் கலந்துகொண்டார். சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மட்டத்தில் செய்யவேண்டிய நடவடிக்கைகள், சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள், பாடசாலையில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த பெற்றோர்கள் எவ்வாறு மாணவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் ஆகிய விடயங்களுக்கு இதன் போது விளக்கமளிக்கப்பட்டன.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறந்த வில்லாளி



முல்லை ஜெயவீரன் அந்த மூன்று அரக்கர்களையும் அங்கேயே நிறுத்தி விட்டு அரண்மனைக்குள் சென்றான். அங்கே வெள்ளிக் கத்தியொன்று மேசை மேல் வைக் கப்பட்டிருந்தது. அதன் அருகில், மேசையின் மேல் ஒரு கடிதம் இருந்தது.

கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த் தான். அதில் இக்கத்தியாரிடம் இருக்கிறதோ, அவர்கள் இறந்தவர்களையும் பிழைக்க வைப்பர் என்று எழுதியிருந்தது. அக்கத் தியை எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டான் ஜெயவீரன்.

அடுத்து, இளவரசியின் அறைக்கு வந் தான். அவள் பஞ்சணையில், அழகுப் பதுமையாய் துயில் கொண்டிருந்தாள். அப்படியொரு அழகியை அவன் பார்த்ததே இல்லை.

அவள் வதனம், வானத்துத் தேவதையொன்று மண்ணில் வந்துவிட்டதோ என்று ஐயுறும் வண்ணம் இருந்தது.

அந்த அரக்கர்கள் கையிலா இவளை ஒப்படைப்பது என்று எண்ணியவாறே அவள் அருகில் சென்ற ஜெயவீரன், அவள் படுக்கைக்குக் கீழே கிடந்த அவளது காலணிகளில் ஒன்றை எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டான்.

பின்னர் விலையுயர்ந்த போர்வையின் ஓரத்தில், பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த முத்து பவள மோகினி என்ற அவள் பெயரை மட்டும் கத்தரித்து எடுத்து, அதையும் தன் பையில் போட்டுக் கொண்டான்.

வெளியில் வந்து அந்த மூன்று அரக்கர்களையும் கொன்று அவர்கள், நாக்குகளைத் துண்டித்து, அவற்றைத் தன் பையில் போட்டுக் கொண்டான்.

காலையில் எழுந்த அரசன், அந்த மூன்று அரக்கர்களின் பிணங்களைப் பார்த்துத் திடுக்கிட்டான். என்ன அரசே! இந்த மூன்று அரக்கர்களையும் கொன்றது யார் என்று திகைக்கிறீர்களா? நான்தான்.

நீங்கள் ஏற்கனவே நாட்டில் பறை அறிவித்தது போல், உங்கள் மகளை எனக்கே திருமணம் செய்து கொடுக்க வேண்டும்! என்று அருகிலிருந்த தளபதி சொன்னான்.

அவனுக்கு ஒரு கண் குருடு. அத்துடன் விகாரமான தோற்றமுடையவன். இளவரசிக்கு அவனை மணக்க விருப்பமில்லை. மன்னர் தன் வாக்குறுதியை நிறைவேற்ற நினைத்தார். முடியவில்லை. எனவே, இளவரசியின் மேல் மன்னருக்குக் கோபம் ஏற்பட்டது.

சாலையோரத்தில் ஒரு குடிசையைக் கட்டி, வருவோர் போவோர்க்கெல்லாம் சமைத்துப் போடும்படி இளவரசிக்கு ஆணையிட்டான் மன்னன்.

சாதாரணப் பெண் போன்று உடையுடுத்தி, அரசன் தரும் உணவுப் பண்டங்களை வைத்து, தினமும் அவ்வழியாக வருவோருக்கு உணவு படைத்து வந்தாள் இளவரசி.

ஒருநாள், அவ்வழியாக ஜெயவீரன் வந் தான். இளவரசியின் குடிசைக்குச் சென்றான். அவள் உணவு பரிமாறிக் கொண்டிருக்கும் போது அவனிடம் இருந்த அந்த வெள்ளி வாளைப் பார்த்துவிட்டாள்.

இளைஞரே! இந்த வெள்ளி வாள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஒரு அரண்மனையில் இளவரசி ஒருத்தியை இரவில் பார்க்கச் சென்றபோது கிடைத்தது.

இதன் மகிமை என்ன? இது யாருடைய கையில் இருக்கிறதோ, அவர்கள் இறந்தவர்களையும் பிழைக்க வைப்பர். உங்களுக்கு அந்த அரண்மனையில் ஏற் பட்ட வேறு அனுபவங்கள்? இளவரசியைக் கவர் ந்து போக வந்த மூன்று அரக்கர்களைக் கொன்று, அவர்களின் நாக்கை இந்த வாளினாலேயே அறுத்தேன்.

இதை நான் எப்படி நம்புவது? இதோ, அவர்களுடைய மூன்று நாக்குகளையும் என் பையினுள் வைத்திருக்கிறேன்.

நீங்கள் அரண்மனைக்கு வந்தீர்கள் என்பதற்கு வேறு சான்றுகள்?

இதோ, அந்த இளவரசி முத்துப் பவள மோகினியின் ஒரு கால் செருப்பும், அவள் பெயர் பொறித்த போர்வையின் துணியும்.

ஐயோ இளைஞரே! நான்தான் அந்த இளவரசி.

கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இருவரும் அரசனிடம் சென்று உண்மையைக் கூறினர். பொய் சொன்ன ஒற்றைக்கண் ,தள பதியை அரசன் கழுவேற்றினான். ஜெய வீரனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான்.

# 06.2015 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1429 - நூறாண்டுகள் போர்: ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயர்களிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தொமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார். தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1830 - 34,000 பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.
- 1898 - பிலிப்பீன்ஸ் ஸ்பெயினிடமிருந்து விடுதலையை அறிவிதத்து.
- 1902 - ஆஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- 1934 - பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.
- 1935 - பொலீவியாவுக்கும் பராகுவேயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: 13,000 பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்சில் ஜெர்மனியரிடம் சரணடைந்தனர்.
- 1943 - நாசி ஜெர்மனியர் மேற்கு உக்ரைனில் 1,180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.
- 1964 - தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்தது.
- 1967 - சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளி கோளை நோக்கி ஏவியது. வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1987 - மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடெல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை அறிவிக்கப்பட்டது.
- 1990 - ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.
- 1991 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் அதிபரானார்.
- 1991 - மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1999 - நேட்டோ தலைமையிலான ஐ.நா அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.
- 2003 - தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்புக்குத் தமிழக அரசு தடை விதித்தது.
- 2005 - அருளானந்தம் சுரேஸ் ஜோக்கிம் ten bin bowling என்ற விளையாட்டினை ரொரண்டோவில் உலக சாதனைக்காக 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து விளையாடி தனது முப்பதாவது கின்னஸ் உலக சாதனையினை நிலைநாட்டினார்.
- 2006 - கூகுள் எர்த், லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.

**பிறப்புகள்**

- 1924 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், அமெரிக்காவின் 41 ஆவது குடியரசுத் தலைவர்
- 1932 - பத்மினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2006)
- 1942 - பேர்ற் சக்மன், நோபல் பரிசு பெற்ற ஜெர்மனிய உடற்றொழிலியலாளர்
- 1957 - ஜாவெட் மியன்டாட், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்

**இறப்புகள்**

- 2014 - வாண்டுமாமா, குழந்தை எழுத்தாளர் (பி. 1925)
- 2014 - கொடுக்காப்புளி செல்வராஜ், நகைச்சுவை நடிகர்

சிறப்புநாள்

- குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்

## குழந்தைகள் தொழிலாளர் எதிர்ப்பு நாள்



குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினமாக (World Day Against Child Labour) உலகம்முழுவதும்ஆண்டு தோறும் ஜூன் 12 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நாள் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 2002 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது.

குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2006 அக்டோபர் 10ஆம் திகதி முதல் வீடு, சாலையோர கடைகள், ஓட்டல்கள் போன்ற இடங்களில் 11 வயதிற்கு உட்பட்ட சிறுவர், சிறுமியரை வேலைக்கு அமர்த்த மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

குழந்தைகள் நலனுக்கான சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பதிப்புகளை மூன்று வகையாக பிரித்துள்ளது. உடல் ரீதியான பாதிப்பு, உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு மற்றும் உணர்வு மற்றும் சமூகரீதியான பாதிப்பு

கொடிய வறுமை, உட்டசத்துக் குறைவு, கல்வியறிவு பெற முடியாத நிலை, உடல் நலனை பாதிக்கக் கூடிய ஆபத்தான சூழல், காற்றோட்டம் இல்லாத குறுகிய அறை போன்றவை சிறார்களின் உடல் நலனைப் பெரிதும் பாதிப்பதால் ஆஸ்துமா, காசநோய் போன்ற ஆபத்தான நோய்களின் தாக்குதலுக்கு இலக்காகின்றனர்.

மனரீதியான வளர்ச்சி என்பது எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் நடைமுறை வாழ்க்கை முறையினைப் பற்றிய பொதுவான அறிவு போன்றவை உள்ளடங்கியதாகும். இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் சிறார்களை மிகவும் கடுமையாக பாதிக்கின்றன.

கல்வியறிவு பெறமுடியாமல் வறுமையை விரட்ட எண்ணி சிறுவயது முதல் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு செல்லும் இவர்களால் சமுதாயத்தில் கடைசி வரை ஒரு நல்ல நிலைமையை அடைய முடியாமல் சமுகத்தால் புறக்கணிக்கப்படும் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.

சிறார் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கட்டாயம் ஆக்கப்பட வேண்டும். சிறுவர்களின் தொழில் திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைகளை வளர்க்க பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம்களை நடத்தலாம்.

‘குழந்தைகள் உங்களுக்குப் பிறந்தவர்கள் தான். ஆனால் உங்களுக்காக மட்டுமே பிறந்தவர்கள் அல்ல’ என்பதை பெற்றோர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...'கதையின் கதை

**கோவிலுக்கு வந்த நல்ல செய்தி**

எனக்குள் இப்போது விவரிக்க முடியாத உணர்ச்சி அலைகள். 'மணிச்சித்ரதாழ்' படத்தின் கருவை மட்டுமே எடுத்துக் கொண்டு என் பாணியில் சில கேரக்டர்களை உருவாக்கி 'ஆப்த மித்ரா'வை இயக்கினேன். அந்தப் படம் ரசிகர்களை கவர்ந்த மாதிரியே ரஜினிசாரையும் கவர்ந்திருக்கிறதே!

**மாறு வேடத்தில் ரஜினி**

இதைத்தொடர்ந்து ராம்குமார் பெங்களூரிலிருந்த ரஜினியை பார்க்கப்போனார. அவரிடம், 'என் நண்பர் காந்தி பெங்களூர் சந்தோஷ் தியேட்டரில் 'ஆப்த மித்ரா' படத்தை பார்த்திருக்கிறார்.

அவர்தான் படம் பற்றி என்னிடம் பாராட்டி சொன்னார். அதோட நம்ம வாசுதான் டைரக்ட் பண்ணியிருக்கார்'னு சொன்னார். காந்தி ஒரு படத்தை அவ்வளவு சுலபமா பாராட்டற ஆளில்லை.

அதனால் காந்தியை அழைத்துக்கொண்டு மாறுவேடத்தில் நானும் சந்தோஷ் தியேட்டரில் பிளாக்கில் டிக்கெட் வாங்கி படம் பார்த்தேன். அதில் கட்டில் தானா மேலே தூக்கற சீனைப் பார்த்ததும் அப்படியே ஆடிப்போயிட்டேன். படம் பெரிசா வரும்னு நம்பிக்கை இருக்கு' என்றிருக்கிறார்.



153

நான் சந்தித்தபோது என்னிடமும் படம் பற்றி ரஜினி பாராட்டினார். நான் அவரிடம், 'சர்ர்! ஒரேயொரு வார்த்தை. டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் உங்களை வெச்சு ஏற்கனவே 'ஜக்குபாய்' படம் இயக்கறதா இருந்தது. இப்ப உள்ள சூழ்நிலையில் நீங்க புதுசா ஏதாவது படம் பண்ணினாக்கூட அதை கே.எஸ்.ரவிக்குமாரே டைரக்ட் பண்ணினாத்தான் சரியாக இருக்கும்' என்றேன்.

இப்படிச் சொன்னதும் ரஜினி முகத்தில் ஆச்சரியம். 'என்ன இது! நீங்களும் ரவிக்குமாரும் ஒரே மாதிரி இருக்கீங்க? அவர் கிட்ட இந்த கதை பற்றி சொன்னேன். 'மணிச்சித்ரதாழ்' படத்தை அவர் பார்த்திருக்கிறார். அவர் என்கிட்டே, 'என்ன சார் கலாட்டா பண்றீங்களா? நாங்க உதை வாங்கணும்னு ஆசையா உங்களுக்கு? படத்தில் மோகன் லால் கரெக்டா இடைவேளை நேரத்தில்தான் வரார். நீங்க நடிக்கிற ஒரு படத்துல இடைவேளை வரைக்கும் உங்களைக் காட்டலைன்னா ரசிகர்கள் எங்களை சும்மா விடுவாங்களா?' என்று கேட்டார். அவர் சொன்னப்புறம்தான் நானும் 'மணிச்சித்ரதாழ' பார்த்தேன். அப்பத்தான் அதுக்கும் 'ஆப்த மித்ரா'வுக்கும் உள்ள ஏகப்பட்ட வித்தியாசம் தெரிஞ்சுது. இந்த விடயத்தை நான் ரவிக்குமார்கிட்டே சொன்னபோது, 'அதனால்தான் சார் சொன்னேன்.

டைரக் டர் வாசு இந்தப் படத்தை பண்ணினால் தான் சரியாக இருக்கும்' என்று சொன்னார். *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-162**

...மூணாங்கொதியில புளிகரைச்சு ஊத்தி நாலாங் கொதியில எறக்குறதுக்கு முன்னால கரண்டியில சுட வச்ச நல்லெண்ணயக் கருவாட்டுக் குழம்புச் சட்டிக்குள்ள எறக்கி, சாமிக்குச் சூடம் காமிக்கிற மாதிரி ஒரு அளவு அளாவி மினு மினு மினுன்னு எண்ணெ மெத்த எறக்கிவப்பா பாருங்க... அந்த வாசன அடுத்த தெரு வரைக்கும் அடிக்கும்; நாக்குச் செத்த ஆளுக்கும் நமநமங்கும்.

அன்னைக்கி வச்ச கருவாட்டுக் குழம்புல ரெண்டு ஒச்சமாகிப்போச்சு.

அங்க இங்க தேடியும் கத்திரிக்கா சிக்கல; பாவப்பட்ட பொம்பளைக்குப் பாகக்காயிதான் சிக்குச்சு. தாளிக்கலாம்ன்னு சீசாவ எடுத்துப் பாத்தா, சரீரத்துக்குள்ள ஆத்மாவக்கண்டு புடிச்சுப் புடலாம் போலிருக்கு; சீசாவுக்குள்ள நல்லெண்ணையக் கண்டுபுடிக்க முடியல.

அடித்தூர்ல மஞ்சளாத் தெரியுதே.... அது எண்ணெயாத்தான் இருக்கும்ங்கற ஒரு தெய்வ நம்பிக்கையில கவுத்தா, இருந்த ஒண்ணு ரெண்டு சொட் டும் தாய் வீட் லருந்து மாமியா வீட் டுக்குப் போற புள்ள த்தாச்சி மாதிரி நிதா னமா வேண்டா வெறு ப்பா எறங்கி வந்து ச்சு.

மூதாக்கமாரு செஞ்ச தர்மம்... வருது நல்லெண்ணன்னு அவ சாமியக் கும்பிட்டுப் பாத்துக்கிட்ட இருக்க, சிவபெருமான் தொண்டையோட நின்னு போன நஞ்சு மாதிரி, இறங்கி வந்த எண்ணெ சீசாவோட கழுத்துலயே சீவன விட்டிருச்சு.

கேப்பக்களிய மூணு வெரல்ல பட்டும் படாமப் பிச்சுக் கருவாட்டுக் குழம்புல ஒரு முக்கு முக்கி என்னமோ நாவப் பழத்த வாய்க்குள்ள எறியிற மாதிரி களித்துண்ட நாக்குல எறிஞ்சவன், கண்ண இறுக்கி மூடிக்களியத் த்தூன்னு துப்புனான் பாருங்க...

பசுமாட்டுக்குச் சோளத் தட்ட வெட்டிக்கிட்டிருந்த கொண்ணவாயன் மூஞ்சியில களி மண் அடிச்ச மாதிரி ஓடி ஒட்டிக்கிருச்சு களி.

அய்யா ராசா! என்னாச் சுய்யா... என்னாச்சு?

ராசாவாம் ராசா.... கருவாட்டுச் சாறுக்குக் கத்திரிக்கா வாங்க வக்கில்லாத கிறுக்கி... நீ பெத்த மகன் மட்டும் ராசா எங்கிட்டு ஆகிறது ராசா...?

அடிச்சான் தட்டத் தூக்கித் தலகிழா.

நெளிஞ்சு போச்சு தட்டு; செதறிப்போச்சு களி; தெறிச்சு ஓடி வெறச்சு விழுந்ததுல ரெண்டாஞ் சாவு செத்துப் போச்சு கருவாடு.

ஊர் ஒடுங்கிருச்சு.



அரசமரத்துக் கல்திட்டுல வேட்டிய இழுத்துப் பொத்தி ஒரு கையத் தலைக்கும் ஒரு கையத் தொடை இடுக்குலயும் வச்சு அழுதுக்கிட்டே படுத்துக் கெடந்த அழகுசிங்கத்த, கையில தூக்கு வாளியோட எழுப்புறா சலவைக்காரி. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவம் நாட்டின் மூலை முடுக் தால் அனுஷ்டிக்கப்பட்டது. கல்முனை மாவட்டம் ஹர்த் தாலால் வெறிச்சோடியது. நிசப்தம்.

நெல்லுக்கும் வேளாண் செய் விவசாயிக்கும் பஞ்

எஜமானர் எவரையும் காண வில்லை. என்ன நடந்தா யிற்று என்று ஏங்கி எட்டிப்பார்ப்பது போல் நெற்பயிர்களின் அசைவு இருக்க,

ஓ நெற்பயிர்களே! புங்கு டுதீவில் வித்தியா என்ற மாணவி வன்கணாளர்களால் கொல்லப்பட்டார் என்ற



மாணவி வித்தியா

ஹர்த்தால் அனுஷ்டிக் கிறது என்று தென்றல் செய்தி சொல்ல, செய்தி யின் துன்பம் தாளமுடி யாமல் நெற்பயிர்கள் தலையை அசைத்து தங் கள் முகத்திடை ஓடிய கண்ணீரை வரம்பின் எல் லையால் கட்டுண்ட வெள் ளத்தில் முகம் கழுவுவது போல தலையைக் குனிந்து கொண்டன.

ஆம், அந்தநாள் கல்மு னையில் இனம்புரியாத சோகம் பகிரப்பட்ட நாள். இவையெல்லாம் நடந்து கொண்டிருக்க 25.05.2015 அன்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அனர் த்த முகாமைத்துவ அமை ச்சர் ஜோன் அமரதுங்க,


கல்முனை ஆர்ப்பாட்டம்

## கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் விவகார அமைச்சர்

கெல்லாம் பேசுபொருளா யிற்று. மிகக் கோரத்தன மான முறையில் மாணவி வித்தியா கொல்லப்பட்ட மைக்கு எங்கும் எதிர்ப்பு எழுந்த வண்ணமுள்ளது.

23.05.2015 அன்று சீதுவையில் ஆர்ப்பாட்டம் நடந்தபோது உயர் கல்விப் பிரதியமைச்சர் சுதர்சினி பெர்னாந்து அதில் கலந்து கொண்டார்.

24.05.2015 அன்று கொழும்பு சுதந்திர சதுக் கத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி மாணவி வித்தியா வின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் போராட்டம் நடந்தது.

இந்த நாட்டின் மகளிர் விவகார அமைச்சர் றோசி சேனநாயக்க தலைமையில் நடந்த இந்த எதிர்ப்பு நிகழ்வில் மகளிர் விவகா ரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

மாணவி வித்தியாவுக்கு நடந்த வன்கொடுமை எந்தப் பெண்ணுக்கும் இனிமேல் ஏற்பட்டுவிடக் கூடாது என மகளிர் விவ கார அமைச்சர் றோசி தனதுரையில் தெரிவித் திருந்தார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மெழுகுவர்த்தி ஏந்தியவாறு எதிர்ப்புப் பேரணி நடந்தேற, 25.05.2015 அன்று கல்முனை மாவட் டத்தில் மிகப்பெரிய ஹர்த்

நெல் விளைச்சலில் இல ங்கையின் முதல் மாவட்டம் என்ற பெருமைக்குரிய கல்முனை சுறுசுறுப்பான ஒரு மாவட்டம்.

முஸ்லிம் மக்களை அதிக மாகக் கொண்ட அந்த மாவட்டம் மாணவி வித்தியா வின் படுகொலைக்கு எதிர்ப்

சமே இல்லாத இந்த கல் முனை மண்ணில் வயல்

செய்தி அறியீரோ, மாணவி யின் கொலைக்கு கண்டனம்




புத் தெரிவித்து ஹர்த்தாலை அனுஷ்டித்தபோது எங்கும் நிலங்கள் திகைத்தன போலும். எங்கே இன்று எங்கள் தெரிவித்து கல்முனைப் பதியும் கவலை கொண்டு

பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கின்றார்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பான அறிக்கையை உடனடியாகத் தமக்குத் தரவேண்டும் என்பதே அந்த உத்தரவாக இருந் தது.

நாடு முழுவதிலும் ஆர்ப் பாட்டங்கள்; பிரதம நீதி யரசரும் பொலிஸ்மா அதிபரும் யாழ்ப்பாணம் விஜயம்; கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் அமைச்சர்கள் பங்கேற்பு; மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள்; நடவடிக் கைகள் தொடர்பிலான அறிக்கையை அமைச்சர் ஜோன் அமரதுங்க கோரு தல் என்றளவில் வித்தி யாவின் கொலை நாடு முழுவதிலும் பெரும் பரப ரப்பை ஏற்படுத்திவிட இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு அதி ரடியாக விஜயமொன்றை மேற்கொண்டார்.

(திங்கள் தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அர்த்தமற்ற செயல்களுக்கு மத்தியில் அரசாங்கத்தை முன்னெடுக்க முடியாது

## அஸ்கிரிய மகாநாயக்கர் கருத்து

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைக்குமாறு விடுக்கப்படும கோரிக்கை, நம்பிக்கையில்லாப் பிரேரணை மட்டுமல்லாது புதிதாக அமைச்சர்களை நியமிப்பது உட்பட அர்த்தமற்ற செயல்களுக்கு மத்தியில் அரசாங்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது என அஸ்கிரிய மாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

100 நாட்களில மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்தாலும் இலங்கையில் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் 100 நாட்களில் செய்து விட முடியாது. எனினும் செய்ய வேண் டிய வேலைகளையும் பிரதான பணிகள் சிலவற்றையும் செய்து முடித்துள்ளதால், மகிழ்ச்சியடையவும் முடிந்துள்ளது. ஒரு வேலை முடிந்ததும் நாடாளுமனறத்தை கலைக்குமாறு ஒரு அணி கூறுவதுடன் மற்று மொரு அணி கலைக்க வேண்டாம்என்கிறது.

மீண்டும் இரண்டு மூன்று அமைச்சு பதவிகள் வழாங்கப்பட்டன. அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். இதற்கு மத்தியில் நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் கொண்டு வருகின்ற னர். இது அரசாங்கமா?. இப்படிஅரசாங்கம்ஒன்றை முனனெடுக்க முடியாது. சிலர் அதிகார பேராசை யால் நாங்கள் வழங்கும் ஆலோசனைகளை மீறி செயறபடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவுக்கு பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும்

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் தலைமைத்துவம் வழங்கியமையைக் கருத்தில் கொண்டு முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஊடகத்துறை பிரதியமைச்சர் சாந்த பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர்களைவிட மகிந்த ராஜபக்ஷவுக்கு அச்சுறுத்தல் அதிகமாக இருப்பதால் அவருடைய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்பதால் பல தரப்புக்களிலிருந்து அவருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனவே அரசாங்கத்தின் பாதுகாப்புப் பிரிவு இவரு டைய பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதியமைச்சர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 100 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 80 | 120 | 120 |
| தக்காளி | 80 | 100 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 80 | 110 | 120 | 100 |
| கரட் | 240 | 160 | 180 | 300 | 180 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 110 | 90 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 150 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 130 | 120 | 120 | 120 | 170 |
| லீக்ஸ் | 250 | 200 | 160 | 200 | 160 |
| பீற்றூட் | 120 | 150 | 140 | 160 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 170 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 150-200 | 250 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 240 | 170 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 170 | 160 | 150 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30+60 | 50 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 260 | 150 | 160 | 150 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 240 |
| முள்ளங்கி | 120 | 100 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 30 | 20 | 20 | 20 |

# ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் பொதுத்தேர்தலுக்கு அஞ்சுகின்றன

## சபாநாயகர் கிண்டல்

(கொழும்பு)

ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் பொது தேர்தலுக்கு அஞ்சுவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கிண்டல் செய்துள்ளார்.

எனக்குத் தெரிந்த வகையில் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டு தரப்புமே அஞ்சுகின்றன.

முடிந்தால் நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன சிறப்புரிமை கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல்களுக்கு அச்சமில்லை என்றார்.

20 ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தாது நாடாளுமன்றம் கலைக்கப்பட வேணடுமென அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியல்ல அவையில் கேள்வி எழுப்பினார். இதற்கு எதிர்க்கட்சிகள் ஆம் என பதிலளித்து, நாடாளுமன்றைக் கலைக்குமாறு கோரியிருந்தன.

எனினும், 20 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என லக்ஸ்மன் கிரியல்ல அவையில் தெரிவித்தார். இந்த வாதப் பிரதிவாதங்களை அவதானித்த சபாநாயகர்சமல் ராஜபக்ஷ, இர ண்டு தரப்புமே பொதுத்தேர்தல் ஒன்றுக்கு செலல அஞ்சுவதாகவே தென்படுகின்றது என தெரிவித்தார். (இ-5)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 399

சுஜே செல்வா





கிரிஸ் கிரி




சிந்து சிந்துஜா





லங்கா பாய் வாமன்




சுஜன் சுஜமுகன்



சுண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பொதுத் தேர்தலும் போர்க்குற்ற அறிக்கையும்

காலத்திற்கு முன்னர் மைதத்திரி அரசாங்கம் தேர்தலை நடத்தி, பலமான அரசாங்கம் ஒன்றை உருவாக்கினால், இவ்வாறான போர்க்குற்ற அறிக்கை தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான திட்டத்தை மைத்திரிபால சிறிசேன வரையமுடியும்.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுசெயலர் பான் கீ மூன், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் திடீரென தொலைபேசியில் அழைப்பு விடுத்தமைக்கான காரணம் என்ன என் பது தொடர்பாக கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் கடந்த வாரம் ஆராய்ந்தன.

பான் கீ மூன் தனது தொலைபேசி உரையாடலின் போது மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தைப் புகழ்ந்து பேசிய போதிலும், செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர் இடம்பெறுவதற்கு முன்னர் சிறிலங்காவில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா என்பது தொடர்பாக அறிவதற்காகவே அவர், தொலைபேசியில் உரையாடியதாகக் கூறப்படுகிறது.

புதிய அரசாங்கப் பிரதிநிதிகளுடனேயே ஐ:நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடரில் தான் பங்கேற்பேன் என மைத்திரிபால சிறிசேன, ஐ.நா செயலாளர் நாயகத்திடம் தெரிவித்ததாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தகவலானது மைத்திரியும் பான் கீ மூனும் பொதுத் தேர்தல் தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளமையை உறுதிப்படுத்துகிறது.

செப்ரெம்பரில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இடம் பெறுவதற்கு முன்னர் சிறிலங்கா தனது பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய தேவையுள்ளதாக அண்மையில் சிறிலங்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வலியுறுத்தியிருந்தார்.

சிறிலங்காவை விட்டு கெரி புறப்படுவதற்கு முன்னர் மறைமுகமாக மைத்திரி அரசாங்கத்திற்குச் சாதகமான பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும் என்ப தைத் தெரிவித்திருந்தார்.

'சிறிலங்காவில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக தங்களால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு சவால்களுக்கும் அதாவது பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள் மற்றும் திறன் விருத்திக்காக எடுக்கப்படும் முயற்சிக்கும் நாங்கள் என்றும் ஆதரவளிப்போம்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாங்கள் உங்களுக்கு ஆதரவுதர விரும்புகிறோம். காலத்திற்கு உகந்த வகையில் தேர்தலை நடத்துவதானது அரசாங்கம் தனது கடப்பாடுகளைப் பின்பற்றுகிறது என்பதற்கான சிறந்ததொரு சமிக்கையாக இருக்கும்' என சிறிலங்கா அதிபரிடம், அமெரிக்க இராஜாங்கச் செயலர் கெரி குறிப்பிட்டிருந்தார்.

சில வாரங்களின் முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், சுகாதார அமைச்சர் கலாநிதி ராஜித சேனரட்னவும் பொதுத்தேர்தலை குறுகிய காலத்தில் நடத்துவது தொடர்பாக மோதிக்கொண்டனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத கூட்டத் தொடருக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துமாறு அனைத்துலக சமூகமும் அமெரிக்க இராஜாங்கச் செயலரும் வலியுறுத்தியுள்ளதாக மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார். பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்வை எட்டவேண்டியது மைத்திரிபால சிறிசேனவின் பணியே அன்றி இது கெரியின் பணியன்று என ராஜித தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே தேர்தலை நடத்துமாறு கெரியும் பான் கீ மூனும் மைத்திரி மீது அழுத்தம் கொடுப்பதாக மைத்திரியின் விசுவாசிகள் கருதுகின்றனர்.

இது உண்மையாயின், ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்பளிக்குமாறு சிறிலங்கா மீது கெரியும் பான் கீ மூனும் அழுத்தத்தை வழங்குவது கடினமான செயலாகும்.

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சிறிலங்காவுக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுக்காது தடுப்பதற்கு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி கடுமையாக உழைத்திருந்தார். சிறிலங்காவுக்கு எதிரான போர்க்குற்ற அறிக்கையை வெளியிடுவதற்கான கால அவகாசத்தை செப்ரெம்பர் வரை நீடிப்பதற்கு கெரி உதவியுள்ளார்.

போர்க்குற்றம் தொடர்பாக விசாரணை செய்வதற்கான உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை செப்ரெம்பருக்கு முன்னர் அமுல்படுத்துவதாக சிறிலங்கா வாக்குக் கொடுத்த பின்னர் இதற்கெதிரான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளகப் பொறிமுறை விரைவில் உருவாக்கப்படும் என மைத்திரி ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். செப்ரெம்பர் மாதத்திலும் உள்ளக விசாரணை அறிக்கையை வழங்காது, அதற்கப்பாலும் கால அவகாசத்தைக் கோர முடியும் என்ற நம்பிக்கையுடன் தான் மைத்திரி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதக்கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளார் என்பதையே இவரது அறிவித்தல் சுட்டி நிற்கிறது.

இதற்கு முரணாக, செப்ரெம்பரில் சிறிலங்கா அரசாங்கம் தனது உள்ளக விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்காது தட்டிக் கழிப்பதற்கும் இதற்காக மேலதிக கால அவகாசத்தைக் கோருவதற்கும் ஜோன் கெரியால் கூட ஆதரவளிக்க இடமளிக்கப்பட மாட்டாது என ஐ.நா மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை ஓகஸ்ட்டில் சிறிலங்கா அரசாங்கத்திடம் கையளிக்கப்படும். இக்கால அவகாசத்திற்கு முன்னர் அனைத்துலக ஊடகங்களின் அழுத்தத்தின் ஊடாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டு விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

இந்த அறிக்கை மக்களின் பார்வைக்காக வெளியிடப்படும் போது, மகிந்த ஆதரவாளர்களும் தேசப்பற்றாளர்களும் இதனைப் பயன்படுத்தி மைத்திரியின் தேர்தல் வெற்றியைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுவார்களோ என ஊடகங்கள் கருதுகின்றன.

போர்க் காலப்பகுதியில் பணியாற்றிய உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் மீது போர்க்குற்றம் சுமத்தப்பட்டால், மைத்திரி அரசாங்கம் பொதுத்தேர்தலை முதனமைப்படுத்தி பிறிதொரு தீர்மானத்தை முன்னெடுக்கலாம்.

காலத்திற்கு முன்னர் மைத்திரி அரசாங்கம் தேர்தலை நடத்தி, பலமான அரசாங்கம் ஒன்றை உருவாக்கினால், இவ்வாறான போர்க்குற்ற அறிக்கை தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான திட்டத்தை மைத்திரிபால சிறிசேன வரையமுடியும்.

செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னரும் பொதுத்தேர்தலின் முன்னரும் மைத்திரி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்காவிட்டால், மகிந்த ஆதரவுக் குழுக்கள் இந்த நகர்வை முறியடிப்பதற்காக திட்டங்களைத் தீட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மைத்திரி போரை வென்றெடுத்த வீரர்களை அவமதிப்பதாக மகிந்த விசுவாசிகள் தவறான விளக்கத்தைக் கற்பிக்க முற்படுவார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும், மகிந்த விசுவாசிகளைப் பலவீனப்படுத்துவதற்குமாக மைத்திரி பொதுத்தேர்தலைப் பிற்போட வேண்டும்.

ஆனால் பொதுத்தேர்தலுக்கு முன்னர் போர்க்குற்ற விவகாரம் தீவிரமுற்றால், இந்தச் சூழலை மகிந்த விசுவாசிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வார்கள். இது நடந்தால், மைத்திரி தனது அரசியற்கட்சிக்குள் மட்டுமல்லாது தேசிய அளவிலும் பலவீனமடைகின்ற நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தேவையான அரசாங்கம் அமைக்க இடமளிக்கப்படாது

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

**மக்கள் ஆணையற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தேவையான வகையில் ஆட்சியை அமைக்க இடமளிக்கப்படமாட்டாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மக்களிடமே அதிகாரம் காணப்படுகின்றது. அந்த அதிகாரத்தை உதாசீனம் செய்து அரசாங்கமொன்றை அமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முயற்சித்தால் அது மக்களுக்கு இழைக்கும் துரோகமாக கருதப்பட வேண்டும்.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்தார்.

அன்று மகிந்தவிற்கு ஆதரவளிக்க நியமிக்கப்பட்டிருந்த நாடாளுமன்றின் மக்கள் ஆணையும் இல்லாமல் போயுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையின் அடிப்படையில் எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

எனினும் இன்னமும் தமக்கு மக்கள் ஆணை இருப்பதாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிரசாரம் செய்கின்றது.

மக்கள் ஆணையை மாற்றுவதனால் மக்கள் முன்னிலையில் மீண்டும் செல்ல வேண்டும்.

பிரதமர் ஒருவரை நியமித்து ஆட்சியை மாற்ற வேண்டுமென கருதினால் அது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்.

20 ஆம் திருத்தச் சட்டத்தை கோரினார்கள், அதனை வழங்கிய போது வேண்டாம் என்கின்றார்கள்.

எனவே நாம் தேர்தல் ஒன்றுக்கு செல்வோம், தேர்தலின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# ரணில் இம்முறை மகிந்தவுடன் மோத வேண்டியுள்ளது-பவித்ரா

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்முறை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மோத வேண்டியிருப்பதாக முன்னாள் அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த முறை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவிற்கு அஞ்சியே ரணில்போட்டியிடவில்லை.

இம்முறை ரணில் மகிந்தவுடன் போட்டிபோட வேண்டியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைவோம் என புரிந்து கொண்ட ரணில் பின்வாங்கினாலும் இம்முறை மகிந்தவை எதிர்நோக்கியே ஆக வேண்டும். அல்லது இம்முறையும் வேறு வேட்பாளர் ஒருவரை தேட வேண்டியேற்படும்.



நல்லாட்சி என்ற போர்வையில் ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் பாரியளவு அடக்குமுறைகளை மேற்கொள்கின்றனர்.

நம்பிக்கையில்லா தீர்மானம் வென்றெடுக்கப்படும். ஆதரவளிக்கும அனைவரிடமும் இன்னமும் கையொப்பங்கள் திரட்டப்படவில்லை.

திட்டமிட்ட வகையில் சில காலம் அரசாங்கத்திற்குள் இருந்து செயற்பட்டோம்.

தற்போது வெளியேறி போராடுகின்றோம் என சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை அகதிகள் தொடர்பில் அரசு தகவல்களை சேகரிக்கிறது

இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் தகவல்களை அரசாங்கம் சேகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்துக்கு செல்லும் வழியில் அவுஸ்திரேலிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு 54 இலங்கையர்களும் தற்போது இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான தகவல் இலங்கை அரசாங்கம், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் ஜகார்த்தா ஆகிய இடங்களில் இருந்து திரட்டிவருவதாக வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் என்று சொல்லப்படுவோர் உண்மையில் இலங்கையர்களா? என்பதை அறிந்து கொளவதற்காகவே இந்த தகவல் திரட்டப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த இலங்கையர்கள் நலமுடன் உள்ளதாகவும் கொலன்னே தெரிவித்துள்ளார். (இ-5)

# சூழ்ச்சிப் பொறியில் நாட்டை மீளச் சிக்க வைக்கக்கூடாது

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சூழ்ச்சிப் பொறியில் நாட்டை மீளவும் சிக்க வைக்கக் கூடாது என ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் ஸ்திரமற்ற தன்மையை நீக்குவதற்கு முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த முற்போக்கு சக்திகள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மகிந்தவை தூக்கிச் செல்லும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கமற்ற தரப்பை தோற்கடிக்க வேண்டும்.

அரசியலமைப்பு திருத்தங்களின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சிகளுக்கு தோல்வியடைந்த தரப்புக்கள் எவ்வளவு அழுத்தங்களை பிரயோகித்தன என்பது வெட்ட வெளிச்சமாகியிருந்தது.

மகிந்த ராஜபக்ஷவின் சூழ்ச்சிகளில் நாடு சிக்குவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போராட்டத்தை முன்னெடுக்கக்



கூடிய முற்போக்கு சக்திகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன் என சோமவனச அமரசிங்க சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## திருவடிச் சிறப்பு

இது நாள்வரை இறைவன் கொடுத்த நாட்களை எப்படி எப்படியோ பாழாக்கிய பழங்கதைபோல் இந்த நாளும் வீணாகப் போகிறது என்றால், பாவப் பட்டியலில் புதிய பதிவேடாக இன்றைய நாள் இருக்கப்போகிறது என்றால் இந்த நாள் தேவைதானா? ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

காரில் பவனி வந்த மகாராஜாவின் மனம் துணுக்குற்றது. ஒரு முதியவர் நடக்க முடியாத நிலையில் தாள மாட்டாத மூட்டை ஒன்றைத் தலையில் சுமந்தபடி வெயிலில் வியர்க்க வியக்க எதிரில் வந்து கொண்டிருந்தார்.

மகாராஜாவின் உத்தரவுப்படி கார் நின்றது. இந்த வயதில் இப்படிக் கஷ்டப்படலாமா? பிள்ளைகள் யாரும் காப்பாற்ற இல்லையா? தலையில் என்ன மூட்டை? மகாராஜாவின் கருணைக் கேள்விகள்.

மகாராஜாவா...என் தெய்வமே இந்த ஏழையின் கதையைக் கேளுங்கய்யா. காட்டில் மரத்தை வெட்டிக் கரியாக்கித் தலைச் சுமையாகக் கொண்டு வந்து ஊர்ல கொடுத்தாத்தான்ய எனக்குச் சோறு. பசங்க யாரும் காப்பாத்தல. இந்தக் கரி சொமந்து வித்தால் கால் வயிற்றுக்கஞ்சி கிடைக்கும் ஏழ்மை பேசியது.

மகாராஜா நிமிர்ந்தார். சாலைக்கு அந்தப் பக்கம் முழுவதும் சந் தன மரங்கள் நிறைந்த காடு. முழுவதும் மகாராஜாவுக்குச் சொந்த மானது. அதில் ஒரு பகுதியை இந்த ஏழைக்குக் கொடுத்தால் என்ன? பலதலைமுறைக்கு அவனுக்கு வறுமையே இருக்காது. ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் சில மரங்களே தந்துவிடும். உதவியா ளரை அழைத்து உத்தரவு பிறப்பித்தார்.

பெரியவரே இந்தச் சந்தனக் காட்டையே உங்க பேருக்குத் தானமாகக் கொடுத்திருக்கேன். கஷ்டப்படாமல் சௌக்கியமாக இருங் கள். மகாராஜாவின் படகுக்கார் சென்று மறைந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு அதே வழியாக அதே மகாராஜா பயணப்பட்ட போது அவருக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. முன்பு பார்த்த அதே கிழவர் தலையில் சாக்கு மூட்டையோடு தடுமாறி நடந்து கொண்டிருந்தார். கார் அவர் முன் நின்றதும் மகாராஜா வைப் பார்த்துப் புலம்பினார்.

"என் தெய்வமா...?நீங்க நல்லா இருக்கணும். கொஞ்ச நாள் உங்க புண்ணியத்தில அரை வயிற்றுக் கஞ்சி குடிச்சேன். மறுபடியும் இந்த நாய்ப் பிழைப்பு...?திகைத்துப் போன மன்னர் பரபரப்புடன் கேட்டார்.

நான் கொடுத்த சந்தனக் காடு என்னாச்சு...? அதை என்ன விலைக்கு விற்றீர்கள்?காட்டை விக்கலை எசமான். இதேமாதிரி மரத்தை வெட்டிக் கரியாக்கித்தான் வித்தேன். கொஞ்சநாள் கஞ்சி குடிக்க உதவியா இருந்தது.

மகாராஜா மரமாகச்சமைந்தார். இது வெறும் கதையல்ல. சந்தன மரங்களைக் கரியாக்கி விற்ற அந்த ஏழையைப்போலத்தான் நாமும் கடவுள் கொடுத்த உடல், உயிர், உள்ளம், வாழ்நாள் இவற் றின் மேன்மை தெரியாமல் கரியாக்கி விடுகிறோம்.

ஒவ்வொரு நாளும் பயன் உள்ளதாக ஆக வேண்டும். சுயவிமர் சனம், சுயதரிசனம் மூலம் நாமே விலங்கிலிருந்து கடவுளாக வேண்டும். உறுதியான உடல், உயர்வான உள்ளம் உய்ய வேண்டிய உயிர் நாம் பெற்றாக வேண்டும். உயிர் உய்ய முடியாதபடி தடையாக இருக்கும் மூன்று வகைப் பற்றுக்களையும் நீக்க வேண்டும். முக்தியை நோக்கி முன்னேற வேண்டும். இறைவன் திருவடியை எய்துவதே ஞானியர் வேட்கை என்று புரிந்து நாமும் அப்படிச் செயற்பட வேண்டும்.

இறைவனது இரண்டு திருவடிகள் பரஞானம், அபரஞானம் என்னும் இருவகை ஞான நிலைகளே இந்து தர்மத்தின் ஆறு உட்பிரிவு களும் திருவடிப் பேறுதான் முக்தி என்று தெளிவுபடுத்துகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடிய திருவள்ளுவர் திருவடியைத்தான் தமது இலட்சியமாகப் பாடினார்.

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் கொண்ட முருகப் பெருமான் சுவ. பன்னிரண்டு கால்களுடன் காட்சி தரவில்லை. பக்தனுக்கு இருப்பது இரண்டு கை. அவன் இரண்டு கைகளாலும் பற்ற இரண்டு கை. அவன் இரண்டு கைகளாலும் பற்ற இரண்டு கால்கள் போதும் என்றே ஞான பண்டிதன் காட்சி தருகிறான். அந்தத் திருவடிகளே இந்துக்களின் வாழ்க்கை இலட்சியம்.

பாகவதத்தில் ஓர் உருக்கமான கட்டம். தேவகி வயிற்றில் தோன் றும் எட்டாவது கர்ப்பம், கம்சனுக்கு எமன் என்று அசரீரி வாக்கு. தேவகி-வசுதேவரைச் சிறையிலிட்டான் கம்சன். அவர்களுக்குப் பிறந்த ஆறு குழந்தைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொன்றான். ஏழாவது கர்ப்பம் இடம்மாறி ரோகிணியின் பிள்ளையானது. எட்டாவதாகக் கண்ணன்.

ஆவணி மாதத்து ரோகிணி நட்சத்திரம் அஷ்டமி திதி கூடிய நாள் இரவில் கோடி சூரியப் பிரகாசமான கண்ணனை ஈன்றாள் தேவகி. பிறந்த போதே சங்கு சக்கரத்துடன் இருந்த பேரொளிப் பிழம்பு பேசியது. யமுனையின் மறு கரையில் நந்தகோபர் திருமாளிகையில் யசோதை பெற்ற பெண் குழந்தையை எடுத்து வந்து இங்கு வைக்கும்படி உத்தரவிட்டான் மாயகிருஷ்ணன்.

நள்ளிரவில் தூயபெருநீர் யமுனையைக் கடந்து கண்ணனை நந்தகோபர் திருமாளிகையில் சேர்ப்பித்துவிட்டு அங்கிருந்த விஷ்ணு மாயை என்னும் கிருஷ்ண சகோதரியைக் கொண்டு வந்து தேவகி யிடம் வந்து தேவகியிடம் கொடுத்தார் வசுதேவர்.

அதுவரை உறங்கிக் கிடந்த சிறைக்காவலர் கண் விழித்தனர். கம்சன் செய்தி அறிந்து பறந்தோடி வந்தான். கொலை வெறி அவன் கண்களில் குடியிருந்தது. ஆறு குழந்தைகளை அவன் கொன்ற போது கொடுத்து நின்ற தேவகி இந்தப் பிள்ளையைத் தர மறுத்தாள். ஏன்? இது யாரோ பெற்ற பிள்ளை. அநியாயமாக அந்தக் குழந்தை கொல்லப்படுவதைத் தடுக்க அவள் போராடினாள்.

குழந்தையின் இரண்டு கால்களையும் இரண்டு கைகளாலும் பிடித்து இழுத்துச் சுவரில் அறைந்து கொல்லும் வழக்கப்படி கம்சன் பற்றி எறிந்தான். என்ன ஆச்சரியம். சாளரம் வழியே பறந்து போய் ஆகாசத்தில் ஜொலித்தாள் விஷ்ணுமாயை. சங்கு சக்கரத்தோடு காட்சி கொடுத்த விஷ்ணு துர்க்கை கலகல என்று சிரித்தாள்.

அட மூடனே என்னைக் கொல்லுபவன் யாரும் இன்னும் பிறக் கவே இல்லை. என்னைக்கொலை செய்ய எண்ணிய உன்னை இந்நேரம் நான் கொன்றிருப்பேன். ஏன் கொல்லவில்லை தெரி யுமா? கொல்ல நினைத்த நீ கொல்லுவதற்கு என் கால்களைப் பிடித்து விட்டாய். திருவடிகளைப் பற்றியவனை எந்தத் தெய்வமும் கொல்லுவதில்லை என்றாள்.

திருவடியின் சிறப்பு இப்போது புரிந்திருக்குமே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.சமூக கட்டமைப்பு சீர்குலைவுக்கு முன்வைக்கப்படும் காரணங்கள்...



...'யாயாழ்ப்பாண நீதிமன்றின் மீது காடையர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இக்காடையர்களைக் கட்டுப்படுத்தி நிலைமையை சுமூகமாக்குவதற்காக சிறப்பு அதிரடிப் படை உட்பட மேலதிக படையினர் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டனர்.

இவ்வாறான குற்றச்செயல்களைத் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் கட்டளையிடப்பட்டது. நீதிமன்றின் மீதான தாக்குதலில் ஈடுபட்ட 130 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

வன் முறையை முடிவிற்குக் கொண்டு வருவதற்காகவே நாங்கள் இவர்களைக் கைது செய்தோம்' என்கிறார் லலித் ஜெயசிங்க.

வடக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ் பேசும் காவற்துறையினர் பணிக்கு அமர்த்தப்பட்டு சட்ட ஒழுங்கு பலப்படுத்தப்பட வேண்டும் என பிரதி காவற்துறைப் பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

'வடக்கில் உள்ள காவற்துறை நிலையங்கள் மற்றும் நீதிமன்றில் மொழி பாரிய பிரச்சினையாக உள்ளது. மக்களுடனான தொடர்பாடல் இடைவெளியைப் போக்குவதற்காக காவற்துறையில் தமிழர்களைக் குறிப்பாக பெண்களை இணைக்குமாறு கோரியுள்ளோம்.

தமது கல்வியை முடித்த பாடசாலை மாணவர்கள் தமது சமூகத்திற்கு சேவையாற்றுவதற்காக உதவிக் காவற்துறை உறுப்பினர்களாகத் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் என நாம் கோருகிறோம்.

தற்போது வடக்கில் உள்ள காவல் நிலையங்களில் நிலவும் மொழிப் பிரச்சினையை ஈடுசெய்வதற்காகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது' எனவும் காவற்துறை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

வடக்கிலுள்ள இளைஞர், யுவதிகள் சிறிலங்கா காவற்துறையில் இணைவதன் மூலம் இவர்கள் நல்ல குடிமக்களாக சமூகத்திற்கு சேவையாற்ற முடியும் எனவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

'போரின் போது மிகமோசமான வன்முறைகளை யாழ்ப்பாண மக்கள் நேரில் கண்டுள்ளனர். மக்களின் வாழ்வானது துப்பாக்கிகள், குண்டுகள் எனப் பலதரப்பட்டவற்றால் சின்னாபின்னமாகியுள்ளது.

ஆனால் தற்போது வடக்கில் வாழும் மக்கள் அமைதி வாழ்விற்குத் திரும்புகின்ற இந் நிலையில் யாழ்ப்பாண சமூகத்தில் சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன' என மூத்த வழக்கறிஞரும் பிரபல விளையாட்டு வீரருமான வி.ரி.சிவலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

'முன்னர் எமது பிரதேசங்களில் ஆயுதங்கள் ஆதிக்கம் செலுத்தின. ஆனால் தற்போது வாள்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய 20 வாள்களை காவற்துறையினர் யாழ்ப்பாண நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

பிரேசிலில் தயாரிக்கப்பட்ட வாள்கள்கூட இதில் காணப்பட்டன. இது என்னை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. யாழ்ப்பாணத்து சமூகமானது அரசியல் தீர்வு மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கின்ற போதிலும் போதைப் பொருட்கள், மதுபானப் பாவனைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் போன்ற பல்வேறு வடிவங்களில் யாழ்ப்பாணத்தில் சமூக விரோதச் செயல்கள் அரங்கேறுகின்றன' என சிவலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி மற்றும் விளையாட்டு போன்ற பல்துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்கள் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண சமூகத்தில் இன்று சமூக விரோதச் செயல்கள் தலைதூக்கியுள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்' என சிவலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்து இளையோர்களைத் தவறான பாதைக்குள் இட்டுச் செல்லும் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு யாழ். மாவட்டச் செயலகம் தீர்மானித்துள்ளது.

போதைப்பொருள் விற்பனையாளர்கள் விற்பனை செய்யப்படும் இடங்கள் தொடர்பாக ஏற்கனவே யாழ். மாவட்டச் செயலகம் அறிக்கை ஒன்றை மே 27 அன்று வெளியிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் காவற்துறையிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் 25 இடங்களில் போதைப்பொருட்கள் விற்கப்படுவதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போதைப்பொருட்களை ஒழிப்பதில் சிறிலங்கா ஜனாதிபதியின் உதவியையும் ஒத்தாசையையும் நாடவுள்ளதாகவும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் பாலியல் முறைகேடுகள், கொலை, கொள்ளை மற்றும் சமூக விரோதச் செயல்களைத் தடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களில் வடக்கில் பாலியல் முறைகேடுகள், மிகவும் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்யலிங்கம் தெரிவித்துள்ளார்.

'கடந்த நான்கு மாதங்களில் பாலியல் முறைகேடுகள் தொடர்பாக 35 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளே இவையாகும். ஆனால் முறைப்பாடு செய்யப்படாத பாலியல் மீறல் சம்பவங்கள் அதிகம் உள்ளன' என சத்தியலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

'வடக்கின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பாலியல் மீறல்கள் இடம்பெறுகின்றன. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டளவில் இது அதிகமாகும்' என சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைத்து நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்வதற்கு சிறிலங்காவின் தற்போதைய சிறிசேன அரசாங்கம் அனுமதித்தமையானது பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டுள்ள மக்களின் வடுக்களை ஆற்றுவதற்குப் பெரிதும் உதவியுள்ளதாக போரின் தாக்கத்தால் சமூக மற்றும் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளானவர்கள் தொடர்பாக ஆராய்கின்றவரும் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போர் இடம்பெற்ற காலங்களில் பணிபுரிந்தவருமான உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

'மக்கள் தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்த விடாது அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஏற்கனவே மனப் பாதிப்பிற்கு உள்ளாகிய சமூகத்தை மேலும் மோசமாக்கும்.

ஏற்கனவே போரின் தாக்கத்தால் பாதிப்பிற்குள்ளாகிய மக்கள் தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்தி மனங்களை இலகுபடுத்தி தமது துயர்களைப் பகிர்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

போரின் போது இறந்த தமது உறவுகளை அமைதி வழியில் நினைவு கூர்வதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த மக்கள் அமைதி வழியில் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் புரிந்துணர்வின் அடிப்படையில் இதற்கான விட்டுக்கொடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தென்னிலங்கை வாசிகள் கருதுகின்றனர்.

இதன்மூலம் நல்லிணக்க முயற்சிகள் துரிதமாக்கப்பட முடியும் என நான் நம்புகிறேன்.

மறுபுறத்தே, மன அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள மக்கள் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த அனுமதிப்பதானது இவர்கள் நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்கும் வழிசமைக்கும்' என பேராசிரியர் தயா சோமசுந்தரம் குறிப்பிட்டுள்ளார். (முற்றும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளின் தாக்குதலினால் நைஜீரியாவில் 15பேர் உயிரிழப்பு

## வீடுகளுக்கு தீ வைத்தும் போகோஹராம் தீவிரவாதிகள் அட்டூழியம்

(கானோ)

**நைஜீரியாவில் கிராமங்களில் புகுந்து 15 பேரை கொலை செய்த தீவிரவாதிகள், அங்கிருந்த 500 இற்கும் மேற்பட்ட வீடுகளை தீ வைத்து கொளுத்தி உணவுப் பொருட்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.**



நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். பெண்களை கடத்துவது, கிராமங்களில் புகுந்து கொள்ளையடிப்பது, அப்பாவி பொதுமக்களை சுட்டுக் கொல்வது போன்ற காரியங்களில் தீவிரவாதிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வருடம் தேர்வு எழுதச் சென்ற பாடசாலை மாணவிகள் 200 இற்கும் மேற்பட்டோரை தீவிரவாதிகள் கடத்தி சென்றனர். அவர்களின் கதி என்ன என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

இந்நிலையில், நைஜீரியாவின் வட கிழக்கு பகுதியில் உள்ள அஸ்கிரா உபா மாவட்டத்தில் உள்ள 2 கிராமங்களில் நேற்று முன்தினம் புகுந்த தீவிரவாதிகள், பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பொதுமக்களை தாக்கி உணவு பொருட்களை கொள்ளையடித்த தீவிரவாதிகள், அங்கிருந்த வீடுகளுக்கு தீவைத்தனர்.

இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து விட்டன. சம்பவம் நடந்த கிராமங்களில் இருந்து தப்பியவர்கள் அருகேயுள்ள பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். பாதுகாப்பு படையினருக்கு தகவல் கொடுத்தும் எவ்வித பயனும் இல்லை எனவும், எங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

நைஜீரியாவில் கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இராணுவ ஜெனரலாக பணியாற்றி ஓய்வு பெற்ற முகமது புகாரி கடந்த மாதம் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். நைஜீரியாவில் தீவிரவாதிகளை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதி அளித்திருந்தார். இந்நிலையில், தீவிரவாதிகளின் அட்டூழியம் தொடர்ந்து கொண்டுதான் இருக் கிறது. அவர் பதவியேற்றதற்கு பின்னர் இது போன்று 12 சம்பவங்கள் நடந்துள்ளன. 109 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 6 வருடங்களாக நைஜீரியாவில் நடந்த மோதலில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நைஜீரியாவில் மட்டுமின்றி அண்டை நாடுகளான கமரூன், நைஜர், சாத் ஆகியவற்றிலும் போகோஹராம் தீவிரவாதிகள் கால்பதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கறுப்பினப் பெண் மீதான தாக்குதல் பதவி விலகினார் பொலிஸ் அதிகாரி

அமெரிக்காவின் டெக்சாஸில், கறுப்பின இளம்பெண்ணைத் தாக்கியதோடு, அவரைக் காக்க வந்த இளைஞர்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய பொலிஸ் அதிகாரி பதவி விலகியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று தனது பதவி விலகல் கடிதத்தை ERIC CASEBOLT வழங்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய MCKINNEY பொலிஸ் துறைத்தலைவர் GREG CONLEY கறுப்பின பெண்ணிடம் CASEBOLT நடந்து கொண்ட விதம் முறையற்றது என்றும், கட்டுப்பாடற்ற முறையில் அவர் நடந்து கொண்டது வீடியோப் பதிவின் மூலம் தெளிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று நடந்த சம்பவம் குறித்த விசாரணை தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளியன்று 15 வயது நிரம்பிய கறுப்பின இளம் பெண் BECTON-யை MCKINNEY பொலிஸ் அதிகாரி மிக மோசமான முறையில் தாக்கியதேடு, அவரை விட்டுவிடும்படி கோரிக்கை விடுத்த இளைஞர்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளார்.

இது தொடர்பான வீடியோப் பதிவுகள் வெளியானதை அடுத்து பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி டெக்சாஸில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதனையடுத்து அந்த அதிகாரி பதவி விலகியுள்ளார். (இ-5)




## லிபியாவின் சிர்டே நகர் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் வசம்

லிபியாவின் முக்கிய நகரமான சிர்டேவை, பஜர் லிபியா படையினரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாக இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பு அறிவித்துள்ளது.

உலக அளவில் பயங்கரவாதச் செயல்களைக் கண்காணித்து வரும "சைட்" அமைப்பு இந்தத் தகவலைத் தெரிவித்தது. இதுகுறித்து "சைட்" அமைப்பு கடந்த செவ்வாய்க் கிழமை தெரிவித்ததாவது,

சிர்டே நகரையும், அங்குள்ள மின் உற்பத்தி நிலையத்தையும் கைப்பற்றியுள்ளதாக ஐ.எஸ். பயங்கரவாதிகள் அறிவித்துள்ளனர்.

பஜர் லிபியா படையினருடன் கடுமையான மோதலில் ஈடுபடும் காட்சிகள், மின் உற்பத்தி நிலையத்தை ஐ.எஸ். அமைப்பினர் நெருங்கும் காட்சி (படம்), பஜர் லிபியா படையினரின் உடல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. புகைப்படங்களை அவர்கள் வெளி யிட்டுள்ளனர் என "சைட்" அமைப்பு தெரிவித்தது.

லிபியாவின் முன்னாள் சர்வாதிகார ஆட்சியாளர் முவம்மர் கடாபியின் சொந்த ஊர் சிர்டே என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

## பாகிஸ்தானில் 15 வயதிலேயே குற்றவாளியானவருக்கு தூக்கு

பாகிஸ்தானில் கொலைக் குற்றச்சாட்டில் 15 வயதில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தூக்கிலிடப்பட்டுள்ளார்.

துன்புறுத்தப்பட்டே இவருக்கு எதிரான வாக்கு மூலம் பெறப்பட்டதாக மனித உரிமை குழுக்கள் குற்றம்சாட்டுகின்றன.

அப்தாப் பஹ்தூர் என்பவர் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை லாஹூர் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டதாக சிறை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். 1992 ஆம் ஆண்டு இரட்டை கொலைக் குற்றச்சாட்டில் கிறிஸ்தவரான பஹ்தூர் குற்றங்காணப்பட்டிருந்தார். மரண தண்டனை விதிக்கப்படும் போது அவருக்கு 15 வயதாக இருந்ததோடு மரண தண்டனை விதிப்பதற்காக குறைந்தபட்ச வயது 18 ஆக இருக்கவேண்டும் என 2000 ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. "பாகிஸ்தான் நீதித் துறைக்கு இன்று வெட்கக்கேடான தினமாகும்" என்று சர்வதேச மனித உரிமைக்குழுவின் இயக்குநர் மாயா போ தெரிவித்தார்.

இதில் சம்பவத்தை நேரில் பார்த்த இருவரின் சாட்சியத்தின் அடிப்படை யிலேயே பஹ்தூருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தாம் துன்புறுத்தப்பட்டே வாக்குமூலம் பெறப்பட்டதாக அந்த இருவரும் பின்னர் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் பஹ்தூர் நிரபராதி என்பதற்கான சாட்சியங்களை கொண்டுவர அவரது நீதிபதி கால அவகாசம் கேட்டநிலையில் அதனையும் பாகிஸ்தான் நீதித் துறை மறுத்துள்ளது. (இ-5)

## எகிப்தில் கோயில் மீது தற்கொலைத் தாக்குதல்



எகிப்து லுக்சோர் நகரின் பண்டைய கர்னக் கோயிலை இலக்கு வைத்து தற்கொலை தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகளுக்கு காயம் ஏற்படவில்லை. இந்த பண்டைய நகருக்கு ஒவ்வொரு ஆண்டும் [illegible] மில்லியன் கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

நைல் நதி பக்கமாக இருக்கும் சுற்றுலா பயணிகளை கவர்ந்த கோயிலை இலக்கு வைத்து நடத்தப்படவிருந்த மற்றும் இரு தற்கொலை தாக்குதல் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இரு தற்கொலைதாரிகளும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதோடு மூன்றாமவர் தடையை கடந்து குண்டை வெடிக்கச் செய்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கர்னக் வளாகம் பிரமாண்டமான திறந்தவெளி அருங்காட்சியகமாக இருந்து வருகிறது. இது கம்போடியாவின் அங்கோர் வட் கோயிலுக்கு அடுத்து இரண்டாவது பண்டைய மதத்தலமாகவும் இடம்பிடித்துள்ளது. கீஸா பிரமீட்டுக்கு அடுத்து எகிப்தில் அதிக சுற்றுலா பயணிகளை கவர்ந்த இடமாகவும் இது காணப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு எவரும பொறுப்புக் கோராவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயமரியாதை இருப்பின் தேர்தலை உடன்நடத்தவும்

## ரணிலுக்கு மகிந்த சவால்



(கொழும்பு)

சுய மரியாதை இருப்பின் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன்றுக்கு செல்லுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுத்துள்ளார்.

வெலிகந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

30 வருடங்கள் காணப்பட்ட கொடூர யுகத்தை நாங்கள் மாற்றியமைத்தோம். இந்த சுதந்திரத்தை அனுபவிக்கும் சிலர் சிறிது காலம் சென்ற பிறகு அதனை மறந்து விடுவார்கள்.

நான் முதல் முறை யாழ்ப்பாணத்திற்கு செல்லும் போது கறுப்புக் கொடியை உயர்த்தினார்கள். எனினும் இரண்டாவது முறை செல்லும் போது உயர்த்தவில்லை.

குறைந்த பட்சம் புலிகளை தோற்கடித்த பின் நான் யாழ்ப்பாணம் செல்லும் போது கூட யாரும் எனக்கு கறுப்புக் கொடியை உயர்த்தவில்லை.

தற்போது சில பிரதேசங்களில் எனக்கு எதிராக கறுப்புக் கொடி உயர்த்தப்படுகிறது. இது சிலருடைய அவசியத்திற்காக செயற்படுத்தப்படுவதாகும். எனினும் அதனை நான் கண்டுக்கொள்வதில்லை.

தமது பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியானால் அது பெருமை, மக்களின் ஆதரவு, எனினும் மக்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்கவில்லை.

எனவே இந்த அரசாங்கத்திற்கு சொல்கின்றோம் அனைத்தையும் மேற்கொள்வதற்கு முன்னர், ரணிலுக்கு மக்கள் ஆதரவை பெற்றுக்கொடுங்கள் அவருக்கு மக்களின் ஆதரவு இல்லை. ரணில் மக்கள் ஆதரவை முதலில் பெற்றுக்கொள்வது அவசியம். ரணிலுக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து மக்களுக்கு தெரியும்.

எனவே முதுகெலும்பு உள்ள சுய மரியாதை உடைய ஒருவர் என்றால் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன் றுக்கு செல்லுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பேசும் படம்-67

இடம்: நெல்லியடி



வண்டி வண்டி மேல ஏறினாலும் கெல்மட் ரொம்ப முக்கியம்.

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்: ஜீவா நிலோ

# எனது காலத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றிருந்தால் நிருபிக்கவும்

## அஜித் கப்ரால் சவால்

(கொழும்பு)

**எனது பதவிக் காலத்தில் இலங்கை மத்திய வங்கியில் நிதி மோசடிகள் இடம்பெற்றிருந்தால் அவற்றை நிருபித்துக் காட்டுங்கள் என்று அவ்வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் சவால் விடுத்துள்ளார்.**



இலங்கை மத்திய வங்கி ஆளுநராகத் தாம் பதவி வகித்த காலத்தில் எந்த நிதி மோசடியுமே இடம் பெறவில்லை என்பதைத் தம்மால் உறுதிபடக் கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

திறைசேரி நிதி முறி விநியோக மோசடியை மூடி மறைக்கவே தமக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நான் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் அதாவது 2005இல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டேன்.

அப்போது இந்நாட்டின் தனிநபர் வருமானம் 1350 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. அது ஒன்பது வருடங்கள் கழிந்த பின்னர் 3650 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

அதேபோன்று 2005இல் 24 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட இந்நாட்டு பொருளாதாரம் ஒன்பது வருடங்கள் கழிந்த பின்னர் 75 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது.

இந்தப் பொருளாதார வளர்ச்சியை கடந்த காலத்தில் இருந்த எதிர்க்கட்சி விரும்பவில்லை. அதனால் எனக்கு எதிராகவும் மத்திய வங்கிக்கும், நிதியமைச்சுக்கும் எதிராகவும் பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சேறுபூசும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய அமெரிக்கா, பயங்கரவாதிகளுக்குப் பணம் செல்லுவதை தடுக்கும்சட்டத்தையும்பண மோசடி தொடர்பான சட்டத்தையும் 2002 - 2003 இன் பின்னர் கொண்டு வந்தது.

இச்சட்டங்களை உலகின் எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதன் காரணத்தினால் அனைத்து வங்கிகளுமே மிகுந்த முன்னெச்சரிக்கைகளுடனேயே நிதி நடவடிக்கைகளைக் கையாளுகின்றன.

ஆகவே ரில்லியன், பில்லியன் டொலர்கள் அல்ல முடிந்தால் ஒரு இலட்சம் டொலர்களையாவது பிரச்சினைகள் இல்லாது அனுப்பியோ அல்லது கொண்டு வந்தோ காட்டுமாறு நான் சவால் விடுக்கின்றேன்.

பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழு, இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வு குழு, சர்வதேச நாணய நிதியம் என்பன மேற்கொண்ட ஆய்வுகளிலும் கூட மோசடிகள் இடம்பெற்றதாக கண்டறியப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## ரணிலுக்கு எதிரான பிரேரணைக்கு ஜனாதிபதி மைத்திரி எதிர்ப்பல்ல

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் ஜனாதிபதி எவ்வித எதிர்ப்பையும் வெளியிடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை நீக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானத்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்ற கூட்டணி கூட்டத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நம்பிக்கையில்லா பிரேரணை திட்டமிட்ட வகையில் சமர்ப்பிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் நம்பிக்கையில்லா பிரேரணையை நீக்குமாறு சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



கடந்த வருடம் நடைபெற்ற புகைத்தல் ஒழிப்பு கொடி வாரத்தில் அதிகளவு நிதி சேகரித்த யாழ்ப்பாண சமுர்த்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன் அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் வைத்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது...

(படம்:- காரை நகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரிநதி விவகாரத்தில் ‘ஜெ’ அரசியல் செய்கிறார்

## கர்நாடக அமைச்சர் குற்றச்சாட்டு

ஜெயலலிதாவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதாக கர்நாடகா அறிவித்ததும், காவிரியில் கழிவுநீர் கலப்பதாக தமிழக அரசு வழக்கு தொடுத்துள்ளது எனவும் சொத்துக்குவிப்பு வழக்கை மனதில் வைத்துக் கொண்டு, காவிரி விவகாரத்தில் ஜெயலலிதா அரசியல் செய்கிறார் என அம்மாநில நீர்வளத்துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்துள்ளார்.

கர்நாடக அரசு பெங்களூரில் இருந்து வெளியேறும் பல இலட்சக்கணக்கான லீற்றர் கழிவு நீரை காவிரியில் கலக்கிறது. தமிழக மக்கள் குடிநீராகவும், விவசாய தேவைகளுக்காகவும் பயன்படுத்தும் காவிரி நீரை கர்நாடக அரசு மாசுபடுத்துவதை தடுக்க வேண்டும் என தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. இதனை சட்டரீதியாக எதிர்கொள்ளப் போவதாக கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது.

பெங்களூரின் கழிவு நீரை காவிரி ஆற்றில் கலந்து நீரை மாசுபடுத்துவதாக கர்நாடக அரசு மீது தமிழகம் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்யும்படி கர்நாடக அரசுக்கு இதுவரை உச்ச நீதிமன்றம் உத்தரவிடவில்லை. இருப்பினும் தமிழக அரசின் மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்வது தொடர்பாக சட்ட நிபுணர்களிடமும், நீர்வளத்துறை அதிகாரிகளிடமும் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தை கர்நாடக சட்டபடி அணுகி, உரிய தீர்வை பெறுவதில் உறுதியாக இருக்கிறோம்.

கர்நாடக அரசு சொத்துக் குவிப்பு வழக்கில் மேன்முறையீட்டு முடிவை எடுக்கும் வரை மௌனமாக இருந்த ஜெயலலிதா, திடீரென காவிரியில் கழிவு நீர் கலப்பதாக வழக்கு தொடுத்துள்ளார். இதன் மூலம் ஜெயலலிதாவின் பழிவாங்கும் அரசியல் அப்பட்டமாக தெரிய வந்துள்ளது. தமிழக அரசு கர்நாடகவுக்கு எதிராக தொடுக்கும் எல்லா வழக்குகளையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம் என்றார்.

இதனிடையே கர்நாடகசட்டத்துறை அமைச்சர் டி.பி.ஜெயச்சந்திரா, “காவிரி ஆற்றை கர்நாடகா மாசுபடுத்துவதாக தமிழக அரசு தொடுத்துள்ள வழக்கு அரசியல் உள்நோக்கம் கொண்டது. ஜெயலலிதாவுக்கு எதிராக கர்நாடக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளதன் தொடர்ச்சியாகவே இந்த வழக்கை பார்க்கிறேன். அயல் மாநிலத்துடன் மோதல் போக்கை கடைப்பிடிக்கும் தமிழக அரசின் செயற்பாடு சரியானது அல்ல என மேலும் தெரிவித்தார். (இ-5)

# தொலைபேசி உரையாடல் விவகாரம் குறித்து மத்திய அரசு விசாரணையை நடத்த வேண்டும்

(டில்லி)

தொலைபேசி உரையாடல்களை தெலுங்கானா அரசு ஒட்டுக் கேட்டதாக எழுந்துள்ள புகார் குறித்து மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் சந்தித்த அவர், இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சந்திரபாபு நாயுடு, தெலுங்கானா அரசு மரபு மீறி செயற்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் அருண் ஜெட்லி உள்ளிட்டோரையும் சந்தித்து சந்திரபாபு முறையிட்டார். எனினும், தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதாக எழுந்துள்ள புகாரை தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ் மறுத்துள்ளார்.

ஆந்திர மாநில முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் உரையாடல்களை தெலுங்கானா அரசு ஒட்டுக் கேட்பதாக எழுந்துள்ள புகாரையடுத்து இரு மாநில அரசுகளுக்கிடையே மோதல் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)




# ஈழத்தமிழர் விழ்வுக்காக ஓரணியில் திரளவேண்டும்

## சீமான் வலியுறுத்து


(சென்னை)

**இலங்கைத்தமிழரின் விடிவுக்காக உலகச் சமூகம் உடனடியாக ஒன்றுதிரள வேண்டுமென நாம் தமிழர்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இலங்கையில் இருந்து சென்ற 54 தமிழர்கள் இந்தோனேசியாவுக்கு சென்றிருக்கிறார்கள்.

அங்கேயும் வாழப் பிடிமானம் இல்லாது போனதால் அங்கிருந்து நியூசிலாந்துக்குக் கடல் வழியாக சென்று இருக்கிறார்கள்.

கர்ப்பிணிகளும், குழந்தைகளும் இருக்கிறார்களே என்றுகூட எண்ணாமல், அவர்களின் பயணத்தைத் தடுத்து நிறுத்தி விசாரித்திருக்கிறார்கள்.



அவர்களின் படகுகளை பறித்துக்கொண்டு சுங்கத்துறை படகுக்கு ஏதிலிகளை மாற்றி இருக்கிறார்கள்.

இந்தோனேசியாவில் உள்ள தீமோர் தீவில் படகு ஒதுங்க, இப்போது எந்த வசதியும் இல்லாமல் அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள்.

தீமோர் தீவில் தவிக்கும் ஏதிலிகளைக் காப்பாற்ற உலகத்தின் ஜனநாயக சக்திகள் உடனடியாகக் குரல் கொடுக்க வேண்டும்.

இந்தோனேசிய அரசு அவர்களின் உணவு, உடை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். எண்ணியபடியே அவர்கள் நியூசிலாந்து செல்ல இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என இதில் சம்பந்தப்பட்ட நாடுகள் மனசாட்சியோடு முயற்சி எடுக்க வேண்டும்.

தத்தளிக்கும் தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசின் மூலமாகத் தமிழக அரசும் முயற்சி எடுக்க வேண்டும்.

நாடோடிகளாக அலையும் ஏதிலிகளின் விடிவுக்கு உலக சமூகம் உடனடியாக ஒன்றுதிரள வேண்டிய நேரம் இது” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மியன்மாரைப் போன்ற நாடு அல்ல பாகிஸ்தான்

## பாக்.அமைச்சர் கருத்து



0

எல்லை தாண்டிய மிரட்டலுக்கு அச்சமடைய மாட்டோம் எனவும் மியன்மாரைப் போன்ற நாடு அல்ல பாகிஸ்தான் எனவும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் நிஸார் அலி கான் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு எதிராக மியன்மார் நாட்டில் இந்திய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை ஏனைய நாடுகளுக்கும் ஒரு செய்தி என மத்திய அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் தெரிவித்திருந்தார். பாகிஸ்தானையே அவர் எச்சரித்ததாக கூறப்பட்டு வந்த நிலையல், அந்நாட்டு உள்துறை அமைச்சர் நிஸார் அலிகான் அதற்கு பதில் அளித்துள்ளார்.

மியன்மாரை போன்று பாகிஸ்தான் கிடையாது என்றும், இந்திய தலைவர்கள் பகல் கனவு காண்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்தியாவின் ஆதிக்கத்தை பாகிஸ்தான் ஒருபோதும் ஏற்காது என்று தெரிவித்துள்ள நிஸார் அலி கான், தங்கள் நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு உரிய பதிலடி கொடுக்கும் வலிமை பாகிஸ்தான் இராணுவத்திற்கு இருப்பதாகத் தெரிவித்தார். (இ-5)

# அவுஸ்.நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு பாராட்டு

தமிழ் வளர்ச்சிக்கு, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பெரிதும் பாடுபாட்டு வருவதாக அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில், அந்த நாட்டு ஹைன்த்மார்ஷ் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான மெட் வில்லியம்ஸ், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், அடிலெய்டு தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளது. அச்சங்கத்தின் சார்பில் இரண்டு நாட்கள் சர்வதேச கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கம் வெகு சிறப்பாக உலகமே பாராட்டும் வண்ணம் நடைபெற்றது. தமிழ் கலாசாரம் மற்றும் கலைகளுக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சிறந்த சேவையாற்றி வருகின்றார் என பாராட்டினார்.



மேலும், தமிழுக்கும், தமிழ்க் கலாசாரம், கலைகளுக்கும் முதல்வர் ஜெயலலிதா ஆற்றிவரும் சிறந்த சேவைகள் பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். இந்த சம்பவம் குறித்து, அடிலெய்ட் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் லாரன்ஸ் அண்ணாதுரை, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தங்களின் தலைமையில் தமிழக அரசு மிக சிறப்பாக செயற்படுகிறது. அதிலும் தமிழ் வளர்ச்சித் துறை தமது பணியை உலகளவில் நீட்டித்து எங்களின் அடிலெய்டு தமிழ்ச்சங்கம் வரை புது உறவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வு எங்களுக்கு மகிழ்ச்சியை மட்டுமின்றி புதுநம்பிக்கையையும் கொடுத்துள்ளது. உங்கள் ஆசியோடு மார்ச் 27ஆம் திகதி அடிலெய்டு நகரில் நடைபெற்ற தமிழர் பண்பாட்டு கலை நிகழ்ச்சி உலகமே வியக்கும் வண்ணம் நடைபெற்றது.

இந்த விழாவில், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முதல்வர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தமிழர்களுக்கும், தமிழர்களின் கலைக்கும் மரியாதை செய்தனர் .

இந்த நிகழ்ச்சியை எங்களுக்கு உங்களுக்கு, எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளும், வாழ்த்துகளும் என்று அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி கையகப்படுத்த அரசு தடை உத்தரவு

(கொழும்பு)

**கொழும்பில் அநாவசிய காணி கையகப்படுத்தல் மற்றும் பலாத்கார இடப்பெயர்வு என்பவற்றை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.**

நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவருக்கு பிரதமர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

குறித்த நடவடிக்கைகள் தொடர்பில், மனிதநேய அடிப்படையில் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தின் போது புதிய நகர அபிவிருத்திக்காக கொழும்பில் இருந்து பொதுமக்கள் பலாத்காரமாக வெளியேற்றப் பட்டதுடன் அவர்கள் இன்று பல இன்னல்களை சந்தித்து வருகினறனர். இந்நிலையில் மக்களின்தேவைகள் வெளிப்படையானதும் பொறுப்புக் கூறும் வகையிலும் நிறைவு செய்யப்பட வேண்டும் என பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்



**தேவை**



தொழிலில்லா பிரச்சினையா? இதோ ஒரு அரிய சந்தர்ப்பம். யோகட், ஜேம், ஐஸ்கிறீம், கோடியல், உற்பத்திப் பால்மா போன்ற தொழில்கள் வயது (18-50) வரையிலான ஆண், பெண், இருபாலாரும் உடனடி வேலை வாய்ப்புக்கள் நீங்கள் வரும் நாளிலே வேலை உண்டு.

தங்குமிடம், உணவு முற்றிலும் இலவசம். (மாதாந்த கொடுப்பனவு, எலைவன்ஸ், முற்பணம், மருத்துவ வசதி, வருடாந்த சுற்றுலா, EPF,ETF போன்ற அனைத்து வசதிகளும் மாதாந்த சம்பளம் (25000- 45000) நாள் சம்பளம் (1500) மணமுடித்த தம்பதிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் ஒழுங்குகள் செய்து தரப்படும். குழுக்களாகவோ, நண்பர்களாகவோ, வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உடனே அழைக்கவும்.

075 841 9284, 077 015 3922, 077 673 3588



**45ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்**



அமரர் தனோபிகா சிவனேஸ்
(டெல்க்கா)

தோற்றம்
18.07.1995

மறைவு
02.05.2015

கடந்த 02.05.2015 அன்று அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.06.2015 சனிக்கிழமையன்று முற்பகல் 11 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அத்தோடு 15.06.2015 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது மகளின் செய்தி கேட்டு எமக்கு எல்லாவகையிலும் உதவியவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோர் மற்றும் இறுதிவரை இணைந்திருந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

நெசவுசாலை வீதி,
வளலாய்,
அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.

(719)


# செல்ஃபி




உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் [illegible]
பின்புலத்திலோ இருக்கு[illegible]

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லவற்றையே எண்ணி அதற்காக உண்மையில் உழைத்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். - பார்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காங்கேசன்துறை நடேஸ்வராவை மீட்பார் யாரும் உளரோ!

இலங்கைக்கு சிவபூமி என்று திருமூலர் நாமம் சூட்டினார். சிவபக்தனாகிய இராவணனின் ஆட்சியும் சிவ வழிபாடும் இடம்பெற்றமையாலும் வேதமந்திரங்களின் தலையாக இருக்கக் கூடிய **ஓம்** எனும் பிரணவத்தை இலங்கைத் தமிழ் மக்கள் தங்கள் சாதாரண வாழ்க்கையில் உச்சரிப்பதாலும் இலங்கைக்கு சிவபூமி என்ற பெயர் பொருத்துடையதாயிற்று என்பது நம் சிற்றறிவின் முடிவு.

சிவபூமி என்பதை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண மண்ணில் நம் மூதாதையர்கள் சிவநாமத்தில் கல்லூரிகளை ஆரம்பித்தனர். இதில் ஐந்து கல்லூரிகள் வரலாற்றுப் பெருமையும் சைவசமயப் பின்புலமும் கொண்டவை.

இதில் வண்ணார்பண்ணையில் வைத்தீஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி, வல்வெட்டித்துறையில் சிதம்பராக் கல்லூரி, கீரிமலையில் நகுலேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறையில் நடேஸ்வராக் கல்லூரி.

இதில் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட, பரமேஸ்வரா என்ற பெயர் நீண்டகாலம் உரிமை கோருவார் இன்றி இருந்த போதிலும் திருநெல்வேலியிலுள்ள சைவப் பாடசாலைக்கு 2012 ஆம் ஆண்டில் பரமேஸ்வரா என்ற பெயர் சூட்டப்பட்டதோடு அச்சிவநாமம் மீண்டும் உச்சாடனத்துக்குரியதாயிற்று.

ஈழத்தின் ஐந்து ஈச்வரங்கள் போல, யாழ்ப்பாண மாவட்டத்தில் சிவநாமத்தில் ஐந்து கல்லூரிகள் இயங்கி, தமிழ் மண்ணில் காத்திரமான அறிஞர்கள் - ஆன்மிக வள்ளல்களை உருவாக்கின.

எனினும் இப் பெரும் பணியில் நீண்டகாலம் இணைந்திருந்த காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி யுத்த சூழலுக்குள் அகப்பட்டதிலிருந்து இன்று வரை மீட்டெடுத்து இயங்கவைக்க முடியாமல் இருப்பது மிகப்பெரும் வேதனைக்குரியது.

சான்றாண்மைமிக்க பழைய மாணவர்களைக் கொண்ட காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை மீளவும் கட்டியெழுப்பி எங்கள் பிள்ளைகள் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்கும் நிலைமையை ஏற்படுத்த யாரும் முன்வராதது ஏன்?

காங்கேசன்துறை நடேஸ்வரா ஒரு பெளத்த கல்லூரியாக - கத்தோலிக்க பாடசாலையாக - இஸ்லாமிய கல்லூரியாக இருந்திருந்தால், இன்று நிச்சயம் அது மீட்கப்பட்டிருக்கும். என்ன செய்வது துரதிர்ஷ்டவசமாக நடேஸ்வரா இந்துக் கல்லூரியாக இருந்ததனால் அதனை மீட்பாரும் இயக்குபவரும் இல்லாமல் போயிற்று.

காங்கேசன்துறையில் கட்டப்பட்ட ஹோட்டலுக்குச் சென்று அங்கு தேநீர் அருந்த முடியும். திருமண வரவேற்பு உபசாரங்களைச் செய்யவும் இயலும். லஞ்சும், டினரும் பரிமாறவும் ஏற்பாடு உண்டு.

ஆனால் அதே காங்கேசன்துறையில் உள்ள எங்கள் நடேஸ்வராக் கல்லூரிக்கு நாங்கள் போக முடியாது. எங்கள் பிள்ளைகள் படிக்க முடியாது என்றால் பலவீனம் சிங்கள ஆட்சியாளர்களுடையதா? அல்லது தமிழ் அரசியல் தலைமைகளினுடையதா? என்பதை தமிழ் மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

1983ஆம் ஆண்டு இந்த நாட்டில் நடந்த யூலைக் கலவரத்தின் போது சிதம்பரம் கப்பல் ஏற்றிவந்த தமிழர்கள் தங்கியிருந்து, உணவு உண்டு, சரிந்து உறங்க இடம் கொடுத்த கல்லூரி காங்கேசன்துறை நடேஸ்வரா என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

கட்டிடவளமும் நில வளமும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை மீள இயக்குவது - அங்கு மாணவர்கள் சென்று கல்வி கற்பது - நாம் இழந்த மண்ணை மீட்டு அதனை வளப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமையும். இதற்காக பொறுப்பானவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் கடும் பிரயத்தனம் செய்ய வேண்டும். தேவையாயின் எங்கள் எம்.பிக்கள் ஒரு நேர உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் நடேஸ்வராவை மீட்க உதவலாமன்றோ.

## பொதுக்கூட்டம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி உணவத்து கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல் தொடர்பான பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், வெற்றிலைக்கேணி ஜே-432 கிராம அலுவலர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,64)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இறைவன் தரும் பரிசு

★ கெட்ட மனிதர்களில் இரட்டை முகம் படைத்தவர்களை நீங்கள் காணுவீர்கள். அவர்கள் சிலரிடம் ஒரு முகத்துடன் செல்வார்கள். வேறு சிலரிடம் மற்றொரு முகத்துடன் செல்வார்கள்.

★ இளமை ஆட்டங்களில் மிக எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். இளமைப்பருவம் ஷைத்தான் வேட்டையாடும் தலமாகும்.

★ அக்கிரமம் செய்கிறவன் நிச்சயமாக அவனையே அக்கிரமத்தில் மூழ்கடிக்கிறான். ஆனால், அவனால் இதனை உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

★ எவனுடைய தீங்கான செயலுக்குப் பயந்து மக்கள் அவனுக்கு மரியாதை கொடுக்கிறார்களோ, அவர்களே மக்களில் மகாகெட்டவர்கள்.

★ பெருமைக்காக ஆடை அணிகின்றவருக்கு வாழ்வில் வறுமை உண்டாகும்.

★ உலகத்தில் உண்மை விசுவாசிக்கு இறைவன் தரும் பரிசு வறுமையே.

★ மனம் போன போக்கில் நடந்து கொண்டு இறைவன் அருளை எதிர பார்ப்பவன் முட்டாள்.

★ மனத்தை அடக்கியாண்டு மறுமைக்குப் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி.

## மூன்று பனைமரங்கள் இரவோடிரவாக தறிப்பு

(கரணவாய்)

வரணி தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் இரவோடிரவாக 3 பனைமரங்கள் தறிக்கப்பட்டு ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடியைச் சேர்ந்த சு.சிவராஜா என்பவரது காணியிலும் அதற்கு அருகிலிருந்த காணியிலுமே இவ்வாறு பனைமரங்கள் தறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளன.

தலா 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மேற்படி பனைமரங்கள் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-3,60)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபருக்கு கால்முறிவு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் கால்முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இவ்விபத்தில் உடுப்பிட்டி நவிண்டில் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜெயம் (வயது70) என்பவரே கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை விபத்தில் காயமடைந்த வரதராஜன் சிறிகாந் என்பவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3,60)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன்கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அன்றிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் தினமும் மாலை 7.00 மணியளவில் ஆன்மிக சொற்பொழிவாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் சிறப்புத் தொடர் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஒரே நேரத்தில் இரு போட்டிகளும்

(யாழ்ப்பாணம்)

நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ள மாகாண மட்ட சதுரங்கப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள், வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கும் தோற்றுபவர்களாயின் அவர்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலேயே இரு நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## பேருந்துச் சேவையை பாதை மாற்றவும்

(யாழ்ப்பாணம்)

இலக்கம் 759 வழித்தட பருத்தித்துறை - கொடிகாமம் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகளில் 3 சேவைகளை பாதை மாற்றம் செய்து சேவையில் ஈடுபடுத்தித் தருமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினூடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வழமையான சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளில் 3 சேவைகளை பருத்தித்துறை முதலாம் கட்டை, நாவலடிச்சந்தி, வியாபாரிமூலைச்சந்தி, திக்கம் சந்தி, நெல்லியடி ஆகிய பாதைகளூடாக ஈடுபடுத்துவதனால் பலர் நன்மையடைக்கூடியதாக இருக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து



### சந்தேகம்

சந்தேகம் என்பது ஒரு சாம்பல்போன்றது. சாம்பல் நிறம் கறுப்புமல்ல, வெள்ளையுமல்ல. இப்போது சந்தேகத்தை எப்படித்தீர்ப்பது?

சந்தேகத்தைக் கறுப்பு என்றோ, வெள்ளை என்றோ ஏற்றுக்கொள்ளுங்கள்.

சந்தேகத்தை வெள்ளை எனப் பாருங்கள். சந்தேகமே இருப்பதில்லை அல்லது சநச்தேகத்தைக் கறுப்பு என்று நினைத்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒருவர் நேர்மையானவரோ, நேர்மையற்றவரோ அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது மனம் அமைதியாகிறது. அப்போது நீங்கள் சந்தேகமெனும் சாம்பல் நிறப் பிரதேசத்தில் இருப்பதில்லை. திடநம்பிக்கை கொள்ளுங்கள். " அவர் நேர்மையற்றவர்தான்; இருந்தாலும் அவர் என்னுள் ஒரு பகுதி நான் அவரை அவர் உள்ளபடியே ஏற்றுக்கொள்கிறேன்" என்று எடுத்துக்கொள்ளுங்கள். அவ்வளவுதான் முடிந்துவிட்டது.

சந்தேகம் என்பது இக்கரையிலும் அடி ஊன்றாமல் அக்கரையிலும் அடி ஊன்றாமல் தரையில் பதிந்து நில்லாத ஒரு நிலையற்ற நிலைமை. அங்கிருந்துதான் மனஇறுக்கம் தோன்றுகிறது. இக்கரையோ, அக்கரையோ எங்கேயோ ஒரு இடத்தில் அடியை ஊன்றுங்கள்.

சாதாரணமாக உன்னுடைய வாழ்க்கையில் உடன்பாடானவை (நல்லவை)களை மாத்திரமே நீ சந்தேகிக்கின்றாய் என்பதை கவனித்திருக்கிறாயா? எதிர்மறையானவற்றை நீ சந்தேகிப்பதில்லை. ஒருவருடைய நேர்மையைச் சந்தேகிக்கிறாய், அவருடைய நேர்மையற்ற தன்மையை நம்புகிறாய். யாராவது உன்னுடன் கோபம் கொள்ளும்போது அவருடைய கோபத்தை நீ சந்தேகிப்பதில்லை. யாராவது உன்னை நேசிக்கிறேன் என்று சொல்லும்போது சந்தேகம் எழுகிறது. அவர் என்னை உண்மையாக நேசிக்கிறாரா? நீ மனச்சோர்வடையும் போது " நான் உண்மையிலேயே மனச்சோர்வுடையவனாய் இருக்கிறேனா?" என எண்ணுவதில்லை. உன்னுடைய மனச்சோர்வு உண்மை எனக்கொள்கிறாய். நீ மகிழ்வாயிருக்கும்போது, " நான் உண்மையிலேயே மகிழ்வாய் இருக்கிறேனா? இதுதான் உண்மையாக நான் விரும்பியதா?" எனச் சந்தேகிக்கிறாய். ஆனால் என்றாவது நான் திறமையற்றவன் என்பதில் சந்தேகம் கொள்கிறாயா?

பொதுவாக வாழ்க்கையில் உடன்பாடானவற்றைச் சந்தேகிக்கும் போக்கு உள்ளதைப் பாருங்கள். சந்தேகத்தை அ[illegible] சந்தேகங்களைப் பற்றிச் சந்தேகம் கொள்.

எதிர்மறையானவற்றைச் சந்தேகம் கொள். உடன்பாடானவைகளில் உன்னுடைய நம்பிக்கையை அதிகமாக வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் சாதித்த மாணவிகளுக்கு கௌரவிப்பு






கொழும்பு தியகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில், 800 மீற்றர் தூர ஓட்டப் போட்டியில் முதலிடத்தை பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி தேவதாஸ் டென்சிகா மற்றும் 20 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்ட கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி மாணவி யோகநாதன் சுகிர்தா ஆகியோரை, கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று முன்தினம் புதன்கிழமை கௌரவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக முன்றிலில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில், இருவருக்கும் மாவட்டச் செயலகத்தால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், வீராங்கனைகளின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க-277)

# வடமாகாண கராத்தே போட்டி கிளி.இந்து மாணவன் தங்கம்



அண்மையில் வடமாகாண விளையாட்டுப் போட்டி வவுனியாவில் இடம்பெற்றது. இதில் 15 வயது பிரிவு கராத்தே சண்டைப்போட்டியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் அருளம்பலம் நிறோஜன் மாகாணமட்டத்தில் முதல் நிலையினைப் பெற்று தங்கப்பதக்கம் பெற்றார். இவரை கல்லூரிக்கு வருகைதந்திருந்த வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பாராட்டி கௌரவித்திருந்தார்.

அத்துடன் இந்துக்கல்லூரி மாணவர்கள் கராத்தே சண்டைப்போட்டியிலும் ஏனைய நிலைகளிலும் இடம்பிடித்திருந்தனர்.

15 வயது ஆண்கள் பிரிவில் சிவபாலன் சங்கீதன், பெண்கள் பிரிவில் இராசேந்திரம் பிரியதர்சினி ஆகியோர் 3 ஆம் நிலைகளையும், 17 வயதுப்பிரிவில் ஆனந்தசிவம் கமலினி சண்டைப் போட்டியில் 2 ஆம் நிலையினையும் மனோகரன் சௌமியா குழுக் காட்டாவில் 2 ஆம் நிலையினையும் 19 வயதுப்பிரிவு சண்டையில் தமிழினி 3 ஆம் நிலையினையும் 19 வயதுப் பிரிவு சர்மிளா தனிக்காட்டா, குழுக் காட்டா,சண்டை ஆகியவற்றில் 2 ஆம் நிலைகளையும் பெற்றுக்கொண்டார்கள். (க)

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான காற்பந்தாட்ட போட்டி

## தெல்லிப்பழை மகாஜனா சம்பியன்






வடமாகாண கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளின் அணிகள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டியின், 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி சம்பியனாகியது.

பெண்கள் காற்பந்தாட்டப் போட்டிகள் 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில், வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் மகாஜனாக் கல்லூரியும் மோதின. முதற் பாதியாட்டத்தில் மகாஜனாக் கல்லூரி வீராங்கனை என்.சானு தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும தங்களுக்கான கோல் பெறும வாய்ப்புக்களை இழந்தன.

இறுதியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்ற 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில், வடமராட்சி கொற்றாவத்தை பாடசாலை சம்பியனாகியது. வலிகாமம் புனித ஹென்றியரசர் கல்லூரி இரண்டாமிடத்தையும் மன்னார் சென்.லூசியா மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியது. மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும், மன்னார் சென்.லூசியா மகா வித்தியாலயம் நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில் வலிகாமம் இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனாகியது. யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் மன்னார முருங்கன் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (க)

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும் அதற்கு முன்னர் 7 மணிக்கு இடம் பெறும் மூன்றாமிடத்துக்கான போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கென்றிசியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க)

# இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் முதற்போட்டியில் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி விளையாட்டுக்கழகமும் 7.15 மணியளவில் நடைபெறும் இரண்டாவது போட்டியில் சாந்தை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க)



யாழ்.மாவட்ட 13 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தை பெற்ற உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவிகள் அதிபர், பிரதிஅதிபர், பயிற்சி ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற தாக்குதல் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியது தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட இருவரின் விளக்கமறியல் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் 18 வயது மாணவி வித்தியா வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதை கண்டித்து கடந்த மாதம் 20 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதி சேதமாக்கப்பட்டிருந்ததுடன் இந்த சம்பவம் தொடர்பில் மூன்று வழக்குகளில் 130 பேர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## டிரான் அலஸை கைது செய்ய தடை

(கொழும்பு)


நாடாளுமன்ற உறுப்பினரான டிரான் அலஸை எதிர்வரும் 29ஆம் திகதி வரை கைது செய்ய வேண்டாம் என்று நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தன்னைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டு டிரான் அலஸ் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.


இந்த மனு மீதான விசாரணை நேற்று வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடி தொடர்பில் டிரான் அலஸ் தொடர்புபட்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, அது தொடர்பாக நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)





நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று கற்பூரத்திருவிழா பெரும் எண்ணிக்கையான அடியார்கள் புடைசூழ சிறப்பாக நடைபெற்றது.
அழகிய பீடத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக மணவாளக் கோலத்தில் எழுந்தருளியுள்ளமையை படத்தில் காணலாம்.



## இந்தியா – பங்களாதேஷ் டெஸ்ட்

# வருண பகவானின் வருகையால் 2-ம் நாள் ஆட்டம் கைவிடப்பட்டது



இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்துகூட வீசப்படாமல் முடிவுக்கு வந்தது.

பதுல்லா மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் விக்கெட் இழப்பின்றி 239 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

ஷிகார் தவான் 150 ஓட்டத்துடனும், முரளி விஜய் 89 ஓட்டமும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

தொடக்க ஆட்டம் மழையால் 4 மணி நேரம் வரை பாதிக்கப்பட்டது. 56 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன.

2-ம் நாளான நேற்றும் போட்டி தொடங்குவதற்கு முன்பே மழை பெய்ததால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

ஆடுகளம் முழுவதுமாக தார்பாயால் மூடப்பட்டு இருந்தது. பிற்பகல் மழை சற்று ஓய்ந்தபோதும் ஆடுகளம் ஈரப்பதமாக இருந்ததால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, ஆட்டம் நிறுத்தப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இன்று காலை 9.30 மணிக்கு ஆட்டம் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றும் மழைக்கு வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் கணித்திருப்பதால் இந்த போட்டி சமநிலை ஆகவே அதிக வாய்ப்பு உள்ளது. (க)

## சட்டவிரோத மணல் ஏற்றிய ஐந்து டிப்பர்கள் பறிமுதல்

### சாரதிகள் ஐவரும் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 5 டிப்பர் மண் நேற்று வியாழக் கிழமை அதிகாலை முருங்கன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முருங்கன் பிரதேசத்தில் சட்டவிரோத மண்கடத்தப்படுவது தொடர்பாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் மேற்பார்வையில் பொலிஸ் குழு நேற்று வியாழக்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டது.

இதன்போது முருங்கன் பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றி சென்ற நான்கு டிப்பர்களும், அதே போன்று நானாட்டான் பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றி சென்ற ஒரு டிப்பரும் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பொலிஸாரினால் கைபற்றப்பட்டதுடன் அதனை ஓட்டிச் சென்ற சாரதிகள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தி ஐந்து டிப்பர்களையும் அதற்குள் உள்ள மணணையும் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## இழுபறி நிலை...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதி களை முழுமையாக நிறைவேற் றிய பின்னரே பொதுத் தேர்தலுக்குச் செல்லும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார் என்று தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, இதற்கமைய 20 உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

அதேபோன்று தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ள 20 விவகாரம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக ஆராய்ந்துவருவதுடன், பொதுவான கொள்கைகளுக்கு இணங்கிப்போவதாகவும், எனினும், சிறுபான்மை மக்களைப் பாதிக்கும் ஆசன முறைமையில் விட்டுக்கொடுப்புகள் செய்யப்படமாட்டாது என்ற நிலைப்பாட்டிலேயே தமது கட்சி இருப்பதாகவும், இது தொடர்பில் சு.கவின் யோசனைகள் அடங்கிய அறிக்கை இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலேயே தேர்தல் சீர்திருத்தங்கள் அடங்கிய 20 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆனால், அண்மையில் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள திருத்தச்சட்டமானது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இது எமது யோசனைகளுக்கு முற்றிலும் மாற்றமானது. காலத்துக்கு காலம் மக்கள் சனத்தொகை அதிகரித்துவருகின்றது.

40 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகை இன்று 225 ஆக உயர்ந்துள்ளது. தற்போது 1977இல் பார்க்கிலும் இரட்டிப்பு சனத்தொகையைக் கொண்டுள்ளது. இதற்கமைய நாங்கள் குறைந்தபட்ச உறுப்பினர் தொகையையாவது அதிகரிக்க வேண்டும்.

எமது கோரிக்கை நியாயமானது என்பதாலே ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

இருந்த போதிலும், சிறுகட்சி, சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துகளை உதாசீனம் செய்துவிட்டே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று (நேற்று முன்தினம்) ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்தோம். எமது கட்சியின யோசனைகளை இன்று வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இது குறித்து அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் பேசப்படும் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தேர்தல் முறைமையில்மாற்றத்தைக்கொண்டு வருவதையே தங்களது விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டிருந்தனர்.

இதனாலேயே, 19 ஆவது திருத்தச் சட்டத்தைவிட 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை மக்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தற்போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள 20ஆனது, நாடாளுமன்றில் பெரும்பான்மையுடன் விளங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிமுன்வைத்த யோசனைக்கு முரணாகக் காணப்படுகின்றது என்றார். (செ-11)

## புலம் பெயர் அமைப்புக்...

லண்டனில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடல்களில், இலங்கை அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்திய அமைப்புகளே கலந்து கொண்டன.

வெளிவிவகார அமைச்சர் நடத்திய இந்த பேச்சுவார்த்தைகள் காரணமாக இலங்கை மக்கள் சந்தேகமும், அச்சமும் அடைந்துள்ளனர்.

இந்த கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக அமைச்சர் மக்கள சமரவீர, அமைச்சரவையிடமோ, ஜனாதிபதியிடமோ, பிரதமரிடமோ அனுமதியை பெற்றுக்கொண்டாரா எனவும் எதிர் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கேள்வியெழுப்பினார்.

குறித்த புலம்பெயர் அமைப்புகளின் தடைகளை அகற்றுவது தொடர்பாக இந்த கலந்துரையாடல்களில் பேசப்பட்டதா?

யுத்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மலரை...

திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சிங்களத்தில் மனேல் எனவும் தமிழில் நீலோத்பலம் எனவும் ஆங்கிலத்தில் புளூ வோட்டர் லில்லி எனவும் குறிப்பிடப்பட வேண்டும்.

அத்துடன் தேசிய மலரின் சரியான படத்தை வெளியிட வேண்டும் என்பதுடன் அதன் விஞ்ஞான பெயரான Nymphaea stellata எனவும் குறிப்பிட வேண்டும்.

நாட்டின் தேசிய மலரின் பெயர் அதன் வடிவம் குறித்து போதுமான பிரசாரத்தை பெற்றுக்கொடுப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த அமைச்சரவை பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார்.

பொது மக்கள் முன்வைத்த யோசனையை கவனத்தில் கொண்டு நிபுணர்கள், அதிகாரிகள் அடங்கிய குழு வழங்கிய பரிந்துரைக்கு அமைய நீலோத்பலம் இலங்கை தேசிய மலராக 1986 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கடந்த கால...

ரணசிங்க குடிவரவு-குடியகல்வு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் சி.வாகிஸவரன் மற்றும் பொது ஒழுங்கு மற்றும் கிறிஸ்துவ மத அலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர் மங்கள உங்களில் சிலர் முன்னதாகவே பிரஜாவுரிமை பெற்றுக் கொள்வதற்கு மிகவும் விரும்பியிருந்தமையைப் பற்றியும் ஆனால் இந்நோக்கத்திற்கான வசதி கடந்த சில ஆண்டுகளில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையைப் பற்றியும் ஐயத்துக்கிடமின்றி நாம் அறிந்திருக்கின்றோம்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் சமூகத்தின் உண்மையான பெறுமதியைப்பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் உணர்ந்த நிலையிலுள்ளதுடன், உங்கள் அனைவரையும் எமது பிரஜைகளாக நாம் வரவேற்கின்றோம்.

வெளிநாடுகளில் இலங்கையின் கொடியைத் தற்போது தாங்கிக் கொண்டிருக்கின்ற நீங்கள் அனைவரும் இந்நாட்டின் பிரஜைகளேயாவீர்கள்.

இலங்கையின் குடியியல், பொருளாதார, கலாசார வாழ்க்கையின் சகல அமிசங்களிலும் தங்களுடைய புதுப்பிக்கப்பட்ட பங்கு பற்றுதலை நாம் வரவேற்கின்றோம்.

இலங்கை எமது தாய் நாடாகும். சுதந்திரம் கிடைத்ததிலிருந்து நாம் எம்மை வெவ்வேறு வழிமுறைகளில் அதாவது இன, மத, மொழியியல் ரீதியாகப் பிரிக்கப்படுவதற்கு இடமளித்துள்ளோம்.

இவை எப்படியானவைகளாகவிருந்த போதிலும் நாம் துன்பப்பட்டுள்ளோம். நாம் எமது நாட்டின் சகல பாகங்களிலும் வன்செயல் காரணமாக எமது சிறந்த வாழ்க்கை முன்னேற்றங்களை இழந்துள்ளோம்.

நாம் பெருமளவில் வன்செயல்களைக் கண்டுள்ளோம். இது மனத்தளவிலும் ஆன்ம ரீதியிலும் நாம் ஐக்கியப்படுவதற்கான காலமாகும்.

இந்நாடு எம்மை இணைக்க வேண்டியுள்ள பொதுவெளியாகவுள்ளது. அதாவது இந்நாடானது இந்நாட்டில் வசிக்கும் எம்மையும் எமது நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வசிக்கின்ற உங்களையும் இணைக்கும் வெளியாகவுள்ளது.

கடந்த காலத்தில் விடப்பட்ட பிழைகள் திரும்பவும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படாமல் இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இந்நாட்டு மக்கள் வன்செயலுக்குத் தங்களுடைய புத்திரர்களையும், புத்திரிகளையும் மேலும் இழப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாது.

நாம் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் கொண்டவொரு நாட்டினமாக ஒன்று சேர்ந்து இந்நாட்டிலுள்ள தற்காலிக மற்றும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு நலனை ஏற்படுத்தும் பொது இலக்குகளை எய்துவதற்கு முயற்சி செய்து இலங்கை சகல துறைகளிலும் தனது முழுமையான திறனை எய்துவதை இயலச் செய்தல் வேண்டும்.

உண்மையிலேயே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் கூற்றின்படி 2006ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பில் வதிகின்ற மூன்று உறுப்பினர்களில் ஒருவர் கல்வி கற்ற உயர் தொழில் புரிபவராவர்.

இந்த அமைப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு இலங்கையை தாய் நாடாகக் கொண்ட 8000ற்கும் மேற்பட்ட சட்டம் இயற்றுபவர்களையும் சிரேஷ்ட உத்தியாகத்தர்களையும் முகாமையாளர்களையும் கொண்டுள்ளதாக மதிப்பிடுகின்றது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் வெளிநாடுகளிலுள்ள அநேக நாட்டினங்களின் விஞ்ஞானத்தினதும், தொழினுட்பத்தினதும் முன்னேற்றத்திற்கும் நிதியைத் தேடிப் பின்தொடர்தல் மற்றும் செல்வத்தை ஈட்டுதல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான தங்களுடைய பங்களிப்பைச் செய்முறையில் காண்பித்துள்ளனர்.

தற்போது இவர்களை வரவேற்பதற்கு இலங்கை தனது கதவுகளைத் திறந்து வைத்திருப்பதனால் இவர்கள் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் அபிவிருத்தி நோக்கி இலங்கை மேற்கொண்டுள்ள புதிய பிரயாணத்தில் பங்காளிகளாகவிருப்பதன் பொருட்டு இந்த வரவேற்பை ஏற்று அதற்கு அனுசரணை வழங்குவதன் பொருட்டு இலங்கைக்குத் திரும்பிவருவார்களென நாம் நம்புகின்றோம்.

இவர்கள் எமது அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் எமது சிந்தனையை மேமபடுத்துவதற்கும் எமக்கு உதவுவதன் பொருட்டு ஆண்டுகளின் போக்கில் தாங்கள் பெற்ற திறனையும் தேர்ச்சியையும் பயன்படுத்துவார்கள் என நாம் நம்புகின்றோம்.

மோதலின் நீண்ட ஆண்டுக்காலப் பகுதியில் ஏற்பட்ட மூளைசாலிகளின் வெளியேற்றம் காரணமாக ஏற்பட்ட பின்னடைவை மாற்றியமைப்பதற்கு நாம் கடினமாக உழைத்து தற்போது இலங்கை அதன் வரலாற்றிலான இந்த நெருக்கடியான கால கட்டத்தில் மூளைசாலிகளின் வருகையின் நிமித்தம் சகல நலனகளையும் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்தார். (செ-11)

## சிறுவர்...

தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு பிரத்தியேகமான பொலிஸ் பிரிவை நிறுவுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## ஜகத் டயஸின்...

இராணுவ பணியாளர்களின் தலைமை அதிகாரியாக நியமித்தமை போன்றவை நடந்திருக்கக் கூடாது என அறிக்கையில் லீஹி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கை மேற்கொள்ள உள்ள உள்நாட்டு விசாரணைகளை ஜெனிவா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியான பின்னர் ஆரம்பிக்குமாறும் அவர குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மனித உருவிலான...

பழைய பாலத்தை அண்டிய கடற்கரையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை மரத்தால் உருவாக்கப்பட்ட மனித உருவிலான 5½ அடி உயரமுள்ள சிலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இதனை அவதானித்த கிராம மக்கள் குறித்த விடயம் தொடர்பாக தலைமன்னார் கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து நேற்று காலை இந்தச் சிலை மீட்கப்பட்டு கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## முன்னாள்...

ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் 2014.12.31 திகதி வரை 302 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம்மேலும் கடனைப் பெறுவதற்கான நோக்கில் 5,754 விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

ஆகவே மேற்படி நிவாரணக் கடன் திட்டத்தின் நடைமுறைகளில் அவசியமான மாற்றங்களுடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, லங்காபுத்ர வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கியின் மூலம் மேலும் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்காக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. (செ-11)

## திரை...

இருந்து வெளியேறிய ஊடகவியலாளர் ரோஹித்த பாசன அபேவர்த்தன உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதன்பின்னர் ஆவணப்படத்தை பார்த்தோர், இலங்கையின் நிலைமை மற்றும் நாட்டில் இடம் பெற்ற போர் தொடர்பிலான சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். (செ-11)

## நீதிமன்ற...

இதனை தொடர்ந்து மேலும் சிலர் கைது செய்யப்பட்ட நிலையில் குடாநாட்டில் குறித்த சம்பவத்தின் பின்னான கைதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

குறித்த இளைஞர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் புகைப்படங்களை காண்பித்து கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## பெண்ணின் சடலம்...

ந்ததை கண்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சடலத்தை பொலிஸார் மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைத்ததுடன் மரணம் குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (செ-3,60)


**சுவிசெஸ கூட்ட அறிவித்தல்**

ஏழாலை மேற்கு தம்புவத்தையில் அமைந்துள்ள இம்மானுவேல் தெய்வீக சுகமளிக்கும் தேவாலயத்திற்கு லண்டனிலிருந்து பாஸ்ரர் டேவிட்கமல் சக ஊழியர்கள் ஊழியம் செய்வதற்காக வந்துள்ளார்கள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் அச்செழுவில் சுவிசெஸ கூட்டம் நடைபெறவுள்ளது. கர்த்தருடைய வல்லமையால் சகல வியாதிகளிலிருந்தும் விடுவிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தொடர்பு:-0772866304**

(சி-1242)

**ரமி இசைத்தட்டின் முக்கிய அறிவித்தல்**

எமது நிர்வாகம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமது பழைய முகவர் நிர்வாகத்தில் இருந்து விலக்கப்பட்டு புதிய நிர்வாக உறுப்பினர் ஒருவரை நியமித்துள்ளோம்.

ரமி CD, பார் MP3, Swiss kan கையடக்க தொலைபேசி Swiss kan கடிகாரம் இவை அனைத்து பொருட்களையும் புதிய நிர்வாக உறுப்பினரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

புதிய நிர்வாக முகவரின் பெயர்:-R.தனேஸ்வரன்
தொ.பே.இல:-0752557535, 0778371693

சி.சிவகாந்தன்
சுவிஸ்

(671)

**இலவச கருத்தரங்கு**

**Diploma in Data Analysis through Microsoft Excel**



- **Excel** இன் உதவியுடன் தகவலினை எவ்வாறு ஆய்வு செய்வது?
- 100க்கும் அதிகமான Excel Functionsகளை நடைமுறையில் பயன்படுத்தி எவ்வாறு வேலையினை இலகுபடுத்திக் கொள்வது?

இதுபோன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படும்

இடம்:- **Student Success Centre**
320, Main Street, Jaffna.
கட்டணம்:- இலவசம்

சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் மட்டுமே
ஆசனப் பதிவுகளுக்கு அழையுங்கள் - **077 616 9470**

(C-1241)

**சிங்கள வகுப்புக்கள்**

அரச உத்தியோகத்தர், O/L ல் பரீட்சை எடுப்பவர்கள் வழிகாட்டல் வகுப்புக்கள்.

ஆரம்பம்:-13.06.2015 1PM
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8148

(சி-1240)

FALC **FRENCH LANGUAGE CENTRE**
**REGISTERED FRENCH CENTRE.**

**FRENCH CLASSES**

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..

Register now : 0779 789 456 / 021 221 7781

No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973. | கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி

(C-1217)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org